# வணிகவரி மற்றும் பதிவுத்துறை

## மானியக் கோரிக்கை எண்.11

## முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு

## கொள்கை விளக்கக் குறிப்பு
2023-2024


**பி. மூர்த்தி**

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2023

<u>பொருளடக்கம்</u>


| வரிசை எண். | பொருள் | | பக்கம் எண். |
|---|---|---|---|
| 1 | முன்னுரை | | 1 |
| | 1.1 | பதிவுத்துறையின் வரலாறு | 2 |
| 2 | பதிவுத்துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | | 3 |
| | 2.1 | பதிவுத்துறையால் முழுமையாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | 3 |
| | 2.2 | பதிவுத்துறையால் பகுதியாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | 6 |
| 3. | துறையின் அமைப்பு | | 6 |
| | 3.1 | பதிவுத்துறை தலைவர் | 7 |
| | 3.2 | துணை பதிவுத்துறை தலைவர் | 9 |
| | 3.3 | உதவி பதிவுத்துறை தலைவர் (மண்டலம்) | 13 |
| | 3.4 | மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்) | 13 |
| | 3.5 | சார்பதிவாளர் அலுவலகங்கள் | 15 |
| | 3.5.1 | சார்பதிவாளர்களின் பணிகள் | 15 |
| | 3.6 | பதிவுத்துறை பயிற்சி நிலையம் | 16 |

| | | | |
|---|---|---|---|
| | 3.7 | மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/ தனித்துணை ஆட்சியர் (முத்திரை) | 16 |
| | 3.8 | மாவட்டப்பதிவாளர் (தணிக்கை) | 20 |
| | 3.9 | கட்டட கள ஆய்வு | 21 |
| 4. | பதிவுத்துறையின் மூலம் ஈட்டப்படும் வருவாய் | | 23 |
| | 4.1 | கடந்த பத்து ஆண்டுகளில் அனைத்து இனங்களில் இருந்து ஈட்டப்பட்ட மொத்த வருவாய் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் | 24 |
| | 4.2 | சந்தைப்படுத்தக்கூடிய பத்திரங்கள் மீதான முத்திரைத் தீர்வை | 25 |
| | 4.3 | பிற இனங்களிலிருந்து வருவாய் | 26 |
| 5. | சந்தை மதிப்பு வழிகாட்டி குழு | | 27 |
| | 5.1 | வழிகாட்டி மதிப்பு சீரமைத்தல் | 28 |
| | 5.2 | வழிகாட்டி மதிப்பு மற்றும் பதிவுக் கட்டணம் மாற்றம் | 29 |
| 6. | முத்திரைத் தீர்வை விலக்கு | | 30 |

| | | | |
|---|---|---|---|
| 7. | மோசடியான பதிவுகளை தடுத்தல் | | 31 |
| | 7.1 | ஆதாரை பயன்படுத்தி நிகழ் நேரத்தில் ஆவணதாரர்களின் அடையாளத்தினை சரிபார்த்தல் | 31 |
| | 7.2 | ஆவணத்தை தயாரிக்கும் ஆவண எழுத்தர் அல்லது வழக்கறிஞரின் புகைப்படத்தை ஒட்டுதல் | 32 |
| | 7.3 | பதிவு விதிகளில் விதி 55A உட்புகுத்துதல் | 33 |
| | 7.4 | மோசடி பதிவுகளை விசாரிப்பதற்கான சிறப்பு புலனாய்வு குழு | 35 |
| | 7.5 | போலியான மற்றும் மோசடியான ஆவணத்தை இரத்து செய்ய உத்தரவிட பதிவுத்துறை தலைவருக்கு சட்டப்பூர்வ அதிகாரம் அளித்தல் | 36 |
| 8. | சங்கங்கள் | | 38 |
| 9. | சீட்டுகள் | | 42 |
| 10. | சீட்டு நடுவம் | | 44 |
| 11. | கூட்டுபங்காண்மை நிறுவனங்கள் | | 45 |
| 12. | திருமணப் பதிவு | | 48 |
| 13. | முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் | | 49 |

| | | | |
|---|---|---|---|
| 14. | ஆவண எழுத்தர்கள் | | 50 |
| | 14.1 | தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் நல நிதியம் | 52 |
| 15. | துறையின் தகவல் தொடர்பு தொழில்நுட்ப முயற்சிகள் | | 53 |
| | 15.1 | ‘ஸ்டார் 2.0’ திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள வசதிகள் மற்றும் வழங்கப்படும் சேவைகள் | 54 |
| | 15.2 | தரவு களஞ்சியம் | 56 |
| | 15.3 | தணிக்கை மென்பொருள் | 56 |
| 16. | பதிவுத்துறையில் பொதுமக்களின் நலனுக்கான சிறப்பு திட்டங்கள் | | 57 |
| | 16.1 | மின்னணு ரேகை பதிவு கருவி மூலம் ரேகை பதிவு செய்தல் | 57 |
| | 16.2 | மின்னணு முறையில் சில வகை ஆவணங்களை இணையவழி பதிவு செய்தல் | 58 |
| | 16.3 | இணையவழி சேவைகளுக்கான மின் கையொப்பம் (e-Sign) | 60 |

| | | | |
|---|---|---|---|
| | 16.4 | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம், சென்னை பெருநகர மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் தொடர்பான ஆவணங்களில் பதிவுக்குப் பின்னர் பெயர் மாற்றத்திற்கான தன்னிச்சை விண்ணப்ப வசதி | 60 |
| | 16.5 | தன்னிச்சையான பட்டா மாறுதல் | 61 |
| | 16.6 | மூத்த குடிமக்களுக்கென முன்னுரிமை பதிவு வசதி | 62 |
| | 16.7 | தட்கல் டோக்கன் முறை | 62 |
| | 16.8 | இணையவழி அட்டவணை திருத்தம் மற்றும் திருமண சான்று திருத்தம் மேற்கொள்ளும் வசதி | 63 |
| | 16.9 | அரசு நிலங்கள் பதிவு செய்யப்படுவதை தடுத்தல் | 64 |
| | 16.10 | ஒருங்கிணைந்த தகவல் மையம் | 65 |
| | 16.11 | ஒருங்கிணைந்த சேவை மையம் | 65 |
| | 16.12 | இணையவழியாக வங்கிகளில் கட்டணம் செலுத்திடும் முறை | 66 |

| | | | |
|---|---|---|---|
| | 16.13 | இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் பொருத்துதல் மற்றும் நெகிழ்வட்டு வழங்குதல் | 67 |
| | 16.14 | இணையதளத்தில் வில்லங்கச் சான்று பார்வையிடும் வசதி | 68 |
| | 16.15 | மின்னணு பதிப்புமுறை (e-Stamping) | 69 |
| 17. | உள்ளாட்சி அமைப்புகளுக்கான சொத்து மாற்ற வரி | | 71 |
| 18. | தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 | | 72 |
| 19. | அலுவலகங்கள் மறுசீரமைப்பு | | 72 |
| | 19.1 | புதிய பதிவு மண்டலங்கள் உருவாக்கம் | 72 |
| | 19.2 | புதிய பதிவு மாவட்டங்கள் உருவாக்கம் | 73 |
| | 19.3 | புதிய தணிக்கை அலகுகள் உருவாக்கம் | 74 |
| | 19.4 | நிர்வாக மாவட்டப்பதிவாளர் பணியிடங்கள் தரம் உயர்த்துதல் | 74 |
| | 19.5 | புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் உருவாக்கம் | 75 |
| | 19.6 | சார்பதிவாளர் அலுவலக எல்லைகள் சீரமைப்பு | 76 |

| | | | |
|---|---|---|---|
| | 19.7 | குக்கிராமங்கள் வருவாய் கிராமங்களுடன் இணைப்பு | 77 |
| | 19.8 | அரசு கட்டடங்களில் செயல்படும் மிக பழைமையான சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல் | 77 |
| | 19.9 | அதிக ஆவணப் பதிவு நடைபெறும் சார்பதிவாளர் அலுவலகங்களில் பொதுமக்களுக்கு சிறப்பு வசதிகளுடன் அடிப்படை கட்டமைப்புகளை அமைத்தல் | 78 |
| 20. | பதிவு பொதுமக்களின் நலனுக்காக அரசால் எடுக்கப்பட்டுள்ள இதர புதிய நடவடிக்கைகள் | | 79 |
| | 20.1 | பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் செயல்படும் கட்டுப்பாட்டு அறை | 79 |
| | 20.2 | திங்கட்கிழமைகளில் குறைதீர்க்கும் நாள் | 80 |
| | 20.3 | சனிக்கிழமைகளில் சார்பதிவாளர் அலுவலகங்கள் செயல்படுதல் | 80 |

| | | | |
|---|---|---|---|
| | 20.4 | இந்திய கிறித்துவ திருமண பதிவு மேற்கொள்ள புதிய வசதி | 81 |
| | 20.5 | இந்திய கிறித்துவ திருமண சான்று உண்மை வடிப்புகள் மண்டல துணை பதிவுத்துறை தலைவர்களால் வழங்கப்படுதல் | 82 |
| 21. | முடிவுரை | | 83 |

## வணிகவரி மற்றும் பதிவுத்துறை

## மானியக் கோரிக்கை எண்.11

## முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு

## கொள்கை விளக்கக் குறிப்பு 2023-2024

### 1. முன்னுரை

சொத்துகள் தொடர்பான சட்ட உரிமைகள் குறித்து பொதுமக்கள் அறிந்திருக்கும் வகையில் சொத்து தொடர்பான ஆவணங்களைப் பதிவு செய்யும் நடைமுறையை பதிவுச்சட்டம் வழங்குகிறது. பதிவு செய்யப்படும் ஆவணங்களின் நகல்களை நிரந்தரமாகப் பாதுகாப்பதன் மூலம் மோசடிகளைத் தடுக்கவும் இச்சட்டம் துணை நிற்கிறது. பதிவு நடைமுறைகளை மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மோசடியான ஆவணங்களை இரத்து செய்ய பதிவுத்துறையின் அலுவலர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் பதிவுச்சட்டம், 1908-இல் உரிய திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு தமிழ்நாடு சட்டம் 41/2022 நிறைவேற்றப்பட்டுள்ளது. பதிவுத்துறையில் நிகழ்ந்துள்ள இத்தகைய சீர்திருத்தம் இந்தியாவின் பிற மாநிலங்கள் நமது மாநிலத்திற்கு நேரில் வந்து இதுகுறித்து தெரிந்து கொண்டு

அதனைப் பின்பற்ற விழையும் வகையில் அனைவரின் கவனத்தையும் பெற்றுள்ளது. வங்கிகளில் கடன் பெற நடைபெறும் உரிமை ஒப்படைப்பு ஆவணங்கள், இரசீதுகள், குடியிருப்பு பயன்பாட்டிற்கான ஐந்து ஆண்டுகளுக்குட்பட்ட குத்தகை போன்ற ஆவணங்களை இணைய வழியில் பதிவு செய்யும் புதிய நடைமுறையையும் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இம்முறையானது அனைத்து ஆவணப்பதிவிற்காகவும் பொதுமக்கள் நேரடியாக சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு செல்ல வேண்டிய நிலையை மாற்றியுள்ளது. பதிவு அலுவலர்களின் பணியின் மீதான கண்காணிப்பை மேம்படுத்தும் வகையிலும் பதிவுத்துறையானது சீரமைக்கப்பட்டுள்ளது. ஆவணங்களைப் பதிவு செய்வதோடு மட்டுமின்றி பல்வேறு சட்டங்களின் கீழான திருமணங்கள், சங்கங்கள், சீட்டு நிதியங்கள் மற்றும் கூட்டுபங்காண்மை நிறுவனங்களைப் பதிவு செய்யும் பணிகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.1 பதிவுத்துறையின் வரலாறு

1864-இல் தோற்றுவிக்கப்பட்ட பதிவுத்துறையானது ஆவணப்பதிவு மற்றும் வருவாய் ஈட்டுதலில் தற்போது

அதிவேக வளர்ச்சியை அடைந்துள்ளது. பதிவுத்துறையால் பல்வேறு வகையான சட்டங்கள் பகுதியாகவும் முழுமையாகவும் நிர்வகிக்கப்படுவதோடு சொத்து தொடர்பான ஆவணங்களைப் பாதுகாத்து பொதுமக்களுக்கு சட்டபூர்வ தகவல் வழங்கும் பணியையும் பதிவுத்துறை மேற்கொண்டு வருகிறது.

## 2. பதிவுத்துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

பதிவுத்துறையால் நான்கு சட்டங்கள் முழுமையாகவும் ஒன்பது சட்டங்கள் பகுதியாகவும் நிர்வகிக்கப்படுகின்றன.

### 2.1 பதிவுத்துறையால் முழுமையாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

பதிவுத்துறையால் முழுமையாக நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்கள் பின்வருமாறு:

| வ.எண் | சட்டம் | செயல்பாடுகள் |
|---|---|---|
| 1 | பதிவுச் சட்டம், 1908 | ஆவணப்பதிவு தொடர்பான விதிகளை இச்சட்டம் ஒருங்கிணைக்கிறது. கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் எவை மற்றும் |

| | | |
|---|---|---|
| | | விருப்பத்தின் பேரில் பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் எவை என்பது குறித்து இச்சட்டம் விரிவாக விளக்குகிறது. பதிவின் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள், பராமரிக்கப்பட வேண்டிய பல்வேறு பதிவேடுகள் குறித் இச்சட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. |
| 2 | இந்திய முத்திரைச் சட்டம், 1899 | பல்வகை ஆவணங்களுக்கு விதிக்கப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை விகிதங்கள் இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளன. மேலும், முத்திரைத் தீர்வை எவ்வாறு வசூலிக்கப்பட வேண்டும் என்ற வழிமுறையையும் இச்சட்டம் வகுத்தளிக்கிறது. |
| 3 | தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975 | இலக்கியம், அறிவியல், கல்வி, விளையாட்டு போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக தொடங்கப்படும் சங்கங்களைப் |

| | | |
|---|---|---|
| | | பதிவு செய்வதற்கான வழிமுறையை இம்மாநில சட்டம் வழங்குகிறது. இதுதவிர, காலமுறையாக கோர்வைக்கு தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் குறித்தும் சங்க செயல்பாடு நடைமுறைகள் குறித்தும் இச்சட்டம் எடுத்துரைக்கிறது. |
| 4 | சீட்டு நிதிகள் சட்டம், 1982 | பொது மக்களின் பணத்தை சேமிக்கும் ஓர் அமைப்பாக செயல்படும் சீட்டு நிதியங்களைப் பதிவு செய்தல், சீட்டுகளை நடத்தும் முறை, சீட்டு நிறுவனங்கள் மற்றும் சந்தாதாரர்களுக்கு இடையேயான வழக்குகளைத் தீர்வு செய்வதற்கான வழிமுறைகள் போன்றவற்றை இச்சட்டம் விவரிக்கிறது. |

## 2.2 பதிவுத்துறையால் பகுதியாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

பின்வரும் சட்டங்கள் பதிவுத்துறையில் பகுதியாக நிர்வகிக்கப்படுகின்றன:

1. பிறப்பு, இறப்பு மற்றும் திருமணங்கள் சட்டம், 1886
2. இந்திய கூட்டுபங்காண்மைச் சட்டம் ,1932
3. இந்திய கிறித்துவ திருமணச் சட்டம், 1872
4. பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம், 1932
5. சிறப்பு திருமணச் சட்டம், 1954
6. இந்து திருமணச் சட்டம், 1955
7. தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச்சட்டம், 2009
8. வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961
9. பிறப்பு மற்றும் இறப்புச் சட்டம், 1969

## 3. துறையின் அமைப்பு

பதிவுத்துறையானது, பதிவுத்துறை தலைவரின் கீழ் இயங்குகிறது. மாநிலம் முழுவதும் 10 பதிவு மண்டலங்கள், 54 பதிவு மாவட்டங்கள், முகாம் அலுவலகங்களையும் உள்ளடக்கி

583 சார்பதிவாளர் அலுவலகங்கள் கொண்டதாக பதிவுத்துறை உள்ளது.

## 3.1 பதிவுத்துறை தலைவர்

இந்திய முத்திரைச் சட்டம், 1899-இன் கீழ் தலைமை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலராகவும் சீட்டு நிதிகள் சட்டம், 1982 மற்றும் தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975-இன் கீழ் பதிவாளராகவும் பதிவுத்துறை தலைவர் செயல்படுகிறார்.

பல்வேறு பிரிவுகளில் பதிவுத்துறை தலைவருக்கு உதவிடும் பொருட்டு நான்கு கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள் உள்ளனர். ஒவ்வொரு கூடுதல் பதிவுத்துறை தலைவருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொருண்மைகளின் விபரங்கள் பின்வருமாறு:

| வரிசை எண். | பதவி | பொருண்மை |
|---|---|---|
| 1 | கூடுதல் பதிவுத்துறை தலைவர் (முத்திரை | ஆவணப்பதிவு, முத்திரைத் தீர்வை வசூலித்தல், இந்திய முத்திரைச் சட்டம், 1899 பிரிவு 56-இன் கீழான |

| | | |
|---|---|---|
| | மற்றும் பதிவு) | மேல்முறையீடு, முத்திரைத் தீர்வை திருப்புத் தொகை, மாநில கணக்காயர் தணிக்கை மற்றும் பிற. |
| 2. | கூடுதல் பதிவுத்துறை தலைவர் (வழிகாட்டி) | சந்தை மதிப்பு வழிகாட்டியினை நிர்ணயித்தல் மற்றும் நிர்வகித்தல், இந்திய முத்திரைச் சட்ட பிரிவு 47A(5) மற்றும் 47A(6)-இன் கீழான மேல்முறையீடு மற்றும் பிற. |
| 3. | கூடுதல் பதிவுத்துறை தலைவர் (புலனாய்வு) | உள்தணிக்கை பிரிவு, பல்வேறு திருமண சட்டங்களின் கீழான பதிவுகள் மற்றும் சார்பதிவக எல்லைகள் குறித்த பணி மற்றும் பிற. |
| 4. | கூடுதல் பதிவுத்துறை தலைவர் (சீட்டு மற்றும் சங்கம்) / கூடுதல் சீட்டு பதிவாளர் | சங்கங்கள், சீட்டு நிதியங்கள், கூட்டுபங்காண்மை நிறுவனங்களின் பதிவுகள், அலுவலக கட்டடங்கள், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, வருவாய் ஒத்திசைவு குறித்த பணிகள் மற்றும் பிற. |

## 3.2 துணை பதிவுத்துறை தலைவர்

பதிவுத்துறையின் 10 பதிவு மண்டலங்கள் துணை பதிவுத்துறை தலைவர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. மண்டலங்கள் பல பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தொடர்புடைய மண்டலத்தின் மாவட்டப்பதிவாளர்கள் மற்றும் சார்பதிவாளர்களின் பணிகளைக் கண்காணிக்கும் அலுவலராக துணை பதிவுத்துறை தலைவர் செயல்படுகிறார்.

பல்வேறு மண்டலங்களுக்குட்பட்ட பதிவு மாவட்டங்களின் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | மண்டலம் | மண்டலத்திற்குட்பட்ட பதிவு மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | சென்னை | செங்கல்பட்டு<br>மத்திய சென்னை<br>வட சென்னை<br>தென் சென்னை<br>காஞ்சிபுரம்<br>திருவள்ளூர் |

| | | |
|---|---|---|
| 2 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர்<br>ஈரோடு<br>கோபிசெட்டிபாளையம்<br>திருப்பூர்<br>உதகமண்டலம் |
| 3 | கடலூர் | சிதம்பரம்<br>கடலூர்<br>கள்ளக்குறிச்சி<br>திண்டிவனம்<br>விழுப்புரம்<br>விருத்தாசலம் |
| 4 | மதுரை | திண்டுக்கல்<br>மதுரை வடக்கு<br>மதுரை தெற்கு<br>பழனி<br>பெரியகுளம் |
| 5 | இராமநாதபுரம் | காரைக்குடி<br>இராமநாதபுரம்<br>சிவகங்கை<br>விருதுநகர் |

| | | |
|---|---|---|
| 6 | சேலம் | தர்மபுரி<br>கிருஷ்ணகிரி<br>நாமக்கல்<br>சேலம் கிழக்கு<br>சேலம் மேற்கு |
| 7 | தஞ்சாவூர் | கும்பகோணம்<br>மயிலாடுதுறை<br>நாகப்பட்டினம்<br>பட்டுக்கோட்டை<br>தஞ்சாவூர்<br>திருவாரூர் |
| 8 | திருச்சிராப்பள்ளி | அரியலூர்<br>கரூர்<br>பெரம்பலூர்<br>புதுக்கோட்டை<br>திருச்சிராப்பள்ளி |

| | | |
|---|---|---|
| 9 | திருநெல்வேலி | சேரன்மகாதேவி<br>கன்னியாகுமரி<br>மார்த்தாண்டம்<br>பாளையங்கோட்டை<br>தென்காசி<br>தூத்துக்குடி<br>திருநெல்வேலி |
| 10 | வேலூர் | செய்யார்<br>இராணிப்பேட்டை<br>திருப்பத்தூர்<br>திருவண்ணாமலை<br>வேலூர் |

மதுரை பதிவு மண்டலமானது இரண்டாகப் பிரிக்கப்பட்டு, இராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு அரசாணை (நிலை) எண்.181, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 09.12.2022-இன் படி ஒரு புதிய பதிவு மண்டலம் 29.12.2022 அன்று உருவாக்கப்பட்டது. சென்னை பதிவு மண்டலமானது, சென்னை (வடக்கு) மற்றும் சென்னை (தெற்கு) என இரண்டு புதிய பதிவு மண்டலங்களாகப் பிரிக்க அரசாணை (நிலை) எண்.179, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 09.12.2022-இல்

ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. விரைவில் இப்புதிய பதிவு மண்டலங்கள் செயல்பாட்டுக்கு வரும்.

**3.3 உதவி பதிவுத்துறை தலைவர் (மண்டலம்)**

சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் நான்கு மண்டல உதவி பதிவுத்துறை தலைவர்கள் தங்களது அதிகார எல்லைக்குட்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களில் சோதனை தணிக்கைப் பணியை மேற்கொள்கின்றனர்.

**3.4 மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்)**

ஒரு பதிவு மாவட்டம் நிர்வாக மாவட்டப்பதிவாளரால் நிர்வகிக்கப்படுகிறது. புதியதாக உருவாக்கப்பட்டுள்ள திருவாரூர், திருவள்ளூர், திருப்பத்தூர் மற்றும் பெரம்பலூர் பதிவு மாவட்டங்களையும் சேர்த்து மொத்த பதிவு மாவட்டங்கள் 54 ஆக உள்ளது.

சார்பதிவாளர்களது அலுவலகப் பணியைக் கண்காணிப்பதுடன் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம், 1975-இன் கீழான சங்கங்களின் பதிவு, இந்திய சீட்டு நிதிகள்

சட்டம், 1982-இன் கீழான சீட்டு நிதியங்களின் பதிவு, இந்திய கூட்டுபங்காண்மை சட்டம், 1932-இன் கீழான கூட்டுபங்காண்மை நிறுவனங்களின் பதிவு போன்ற பணிகளும் நிர்வாக மாவட்டப்பதிவாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுடன் பதிவுச்சட்டம், 1908, பிரிவு 77A-இன்படி மோசடி ஆவணப் பதிவுகளின் மீதான விசாரணையையும் இவர்கள் மேற்கொள்கின்றனர்.

நிர்வாகத்தைத் திறம்பட செயல்படுத்திட ஏதுவாக, வருவாய் மாவட்டங்களின் தலைநகரங்களில் உள்ள மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்) பணியிடங்களை உதவி பதிவுத்துறை தலைவர் நிலைக்கு உயர்த்த முடிவு செய்யப்பட்டு, 26 மாவட்டப்பதிவாளர் பணியிடங்கள் உதவி பதிவுத்துறை தலைவர் நிலைக்கு மேம்படுத்தப்பட்டு அரசாணை (நிலை) எண்.160, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 08.11.2022 மூலம் உத்தரவிடப்பட்டுள்ளது. இப்பணியிடங்களை உதவி பதிவுத்துறை தலைவர் நிலையில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 3.5 சார்பதிவாளர் அலுவலகங்கள்

பதிவுத்துறையில் முகாம் அலுவலகங்களையும் உள்ளடக்கி 583 சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. முகாம் அலுவலகங்களுக்கு பிரதான சார்பதிவாளர் அலுவலகங்களில் உள்ள பணியாளர்கள் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் சென்று ஆவணப்பதிவு மேற்கொள்கின்றனர்.

#### 3.5.1 சார்பதிவாளர்களின் பணிகள்

1. பதிவுச்சட்டம், 1908-இன் கீழ் ஆவணங்களைப் பதிவு செய்தல்.
2. இந்து திருமணச் சட்டம், 1955 மற்றும் தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009-இன் கீழ் திருமணங்களைப் பதிவு செய்தல்.
3. சிறப்புத் திருமணச் சட்டம், 1954-இன் கீழ் திருமணங்களை நடத்தி வைத்தல்.
4. வில்லங்க சான்றுகள் மற்றும் ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை வழங்குதல்.
5. பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகளை பாதுகாத்தல் மற்றும் வடிப்புகளை வழங்குதல்.

## 3.6 பதிவுத்துறை பயிற்சி நிலையம்

புதிய பணியாளர்களுக்கு பயிற்சியும் ஏற்கெனவே பணியில் உள்ளவர்களுக்கு துறையால் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகள் குறித்து புத்தாக்கப் பயிற்சியும் அளிக்கும் பொருட்டு 1996-இல் பதிவுத்துறை பயிற்சி நிலையம் சென்னையில் தோற்றுவிக்கப்பட்டது. பயிற்சியில் பங்குபெறும் பணியாளர்களுக்கு தங்கும் விடுதி வசதியுடனான இப்பயிற்சி நிலையம் துணை பதிவுத்துறை தலைவர் நிலையில் உள்ள இயக்குனரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது.

## 3.7 மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை)

இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 47A(1)-இன் கீழ் பதிவு அலுவலரால் பரிந்துரைக்கப்படும் உரிமை மாற்றம், பரிவர்த்தனை, நன்கொடை, பினாமி விடுதலை மற்றும் ஏற்பாடு ஆவணம் போன்றவற்றிற்கான சந்தை மதிப்பினை மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) நிர்ணயிக்கிறார். ஆவணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள மதிப்பானது நடைமுறையில் உள்ள

சந்தை மதிப்பினை விட குறைவாக உள்ள இனங்களில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் பதிவு அலுவலரால் மேற்படி அலுவலர்களுக்கு பரிந்துரைக்கப்படுகின்றன. தமிழ்நாடு முத்திரை (ஆவணங்களின் குறைவு மதிப்பு தடுப்பு) விதிகள், 1968-இல் வகுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி சொத்தின் சரியான சந்தை மதிப்பினை மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) முடிவு செய்கிறார். மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை)-யால் நிர்ணயிக்கப்படும் மதிப்பினை ஏற்றுக் கொண்டு வாங்குபவர் / எழுதிக்கொடுப்பவர் கூடுதல் முத்திரைத் தீர்வையைச் செலுத்தும் நிலையில், பதிவு அலுவலரால் ஆவணமானது குறைவு பதிவுக் கட்டணத்தை வசூலித்த பின்னர் திரும்ப வழங்கப்படுகிறது. மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை)-யால் நிர்ணயிக்கப்படும் மதிப்பிற்கு ஏற்ப குறைவு முத்திரைத் தீர்வையை வாங்குபவர் / எழுதிக்கொடுப்பவர் செலுத்தாத நேர்வுகளில் வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு குறைவு முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படுகிறது. மேலும்,

இறுதியாணை பிறப்பிக்கப்பட்டு இரண்டு மாதத்திற்குள் குறைவு முத்திரைத் தீர்வை செலுத்தப்படவில்லையெனில் கட்டடத்தவறிய மொத்த காலத்திற்கும் மாதம் 1% வட்டியுடன் குறைவு முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படும்.

மாநிலம் முழுவதும் 11 மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித்துணை ஆட்சியர் (முத்திரை) அலுவலகங்கள் செயல்படுகின்றன. அவற்றின் விபரம் பின்வருமாறு:

| **வ. எண்** | **மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை)** | **அலுவலகத்தின் பெயர்** |
|---|---|---|
| 1 | மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) | சென்னை<br>கோயம்புத்தூர் |
| 2 | தனித்துணை ஆட்சியர் (முத்திரை) | கடலூர்<br>காஞ்சிபுரம்<br>மதுரை<br>சேலம்<br>தஞ்சாவூர்<br>திருச்சிராப்பள்ளி<br>திருநெல்வேலி<br>வேலூர்<br>விருதுநகர் |

மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) நிர்ணயிக்கும் மதிப்பை ஆவணதாரர்கள் ஏற்றுக்கொள்ளாத நிலையில் அவ்வாணைகளை எதிர்த்து இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 47A(5)-இன் கீழ் பதிவுத்துறை தலைவருக்கு மேல்முறையீடு செய்யலாம்.

மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) நிர்ணயம் செய்யும் மதிப்பானது அரசு வருவாய்க்கு குந்தகம் ஏற்படுத்துவதாக கருதப்படின், முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் பதிவுத்துறை தலைவர் இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 47A(6)-இன் படி தன்னிச்சையாக சீராய்வினை மேற்கொண்டு அந்த ஆணையைத் திருத்தலாம்; மாற்றலாம் அல்லது தள்ளுபடி செய்யலாம்.

இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 47A(5) மற்றும் 47A(6)-இன் கீழ் பதிவுத்துறை தலைவரால் பிறப்பிக்கப்படும் ஆணைகளை எதிர்த்து ஆவணதாரர் பிரிவு 47A(10)-இன் கீழ் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

## 3.8 மாவட்டப்பதிவாளர் (தணிக்கை)

சார்பதிவாளர் அலுவலகங்களில் பதிவு செய்யப்படும் ஆவணங்களை நூறு சதவிகிதம் தணிக்கை செய்வதற்காக மாவட்டப்பதிவாளர் (தணிக்கை) தலைமையில் உள்தணிக்கைப் பிரிவானது துறையில் செயல்படுகிறது. இத்தணிக்கைப் பிரிவானது, பதிவு செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களையும் ஆய்வு செய்து வருவாய் கசிவு மற்றும் விதிமுறை மீறல்கள் உள்ளதா என சரிபார்க்கிறது. எந்தவொரு வருவாய் இழப்பும் கவனத்திற்கு வராமல் இருப்பதைத் தவிர்ப்பதோடு வருவாய் கசிவினைத் தடுக்கும் ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளையும் உள்தணிக்கைப் பிரிவு மேற்கொள்கிறது. பதிவுத்துறையில் மொத்தம் 49 தணிக்கை பிரிவுகள் செயல்படுகின்றன.

இழப்புகள் கண்டறியப்பட்டால் அதனை வசூல் செய்ய இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவுகள் 33(A), 47A(3) மற்றும் பதிவுச்சட்டம், 1908, பிரிவு 80(A)-இன் கீழான சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், வில்லங்க சான்றில் குறிப்பு செய்யப்படுவதன் மூலம் குறைவுத் தொகை வசூலிக்கப்படும் வரை தொடர் பதிவுகள் தடை

செய்யப்படுகின்றன. தணிக்கை மாவட்டப்பதிவாளரது பணியை தொடர்புடைய துணை பதிவுத்துறை தலைவர் கண்காணிக்கிறார்.

சேலம் (கிழக்கு), காரைக்குடி, கோபிசெட்டிபாளையம், தாம்பரம் மற்றும் கோயம்புத்தூர் (தெற்கு) ஆகிய மாவட்டங்களில் ஐந்து புதிய மாவட்டப்பதிவாளர் (தணிக்கை) பணியிடங்கள் தோற்றுவிப்பதற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் இவ்வலுவலகங்கள் செயல்படும்.

### 3.9 கட்டட கள ஆய்வு

அசையா சொத்து என்பது, நிலம் மற்றும் கட்டடத்தை உள்ளடக்கியதாகும். தமிழ்நாடு முத்திரை (ஆவணங்களின் குறைவு மதிப்பு தடுப்பு) விதிகள், 1968, விதி 3(1-A)-இன் படி கட்டடங்களின் வயது, வகை, தளம், பரப்பு போன்ற விபரங்கள் ஆவணங்களில் கட்டாயம் தெரிவிக்கப்பட வேண்டும். ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு குறைவான மதிப்புகளைக் கொண்ட கட்டடங்களின் கள ஆய்வு சார்பதிவாளர்களால்

மேற்கொள்ளப்படுகிறது. பின்வரும் நேர்வுகளில் கட்டட கள ஆய்வு செய்ய வேண்டியதில்லை:

1) உரிய அனுமதி பெற்ற கட்டடங்கள்
2) ஊரகப் பகுதிகளைப் பொருத்து 1 இலட்சத்திற்கும் குறைவான மதிப்பினைக் கொண்ட கட்டடங்கள்
3) நகர்ப்புறப் பகுதிகளைப் பொருத்து 2 இலட்சத்திற்கும் குறைவான மதிப்பினைக் கொண்ட கட்டடங்கள்

பொதுப்பணித்துறையிலிருந்து பகராண்மையில் இத்துறையில் சென்னை மற்றும் மதுரையில் பணிபுரியும் இரு உதவி செயற்பொறியாளர்களால் தொழிற்சாலை, வணிக வளாகம், பன்னடுக்கு கட்டடங்கள் போன்ற சிறப்பு வகைக் கட்டடங்கள் மற்றும் ஐம்பது இலட்சத்திற்கு மேல் மதிப்பினைக் கொண்ட கட்டடங்கள் கள ஆய்வு செய்யப்படுகின்றன. பொதுப்பணித்துறையினரால் வெளியிடப்படும் மதிப்புகளின் அடிப்படையிலேயே கட்டடங்களின் மதிப்பு நிர்ணயம் செய்யப்படுகிறது.

## 4. பதிவுத்துறை மூலம் ஈட்டப்படும் வருவாய்.

பதிவுத்துறையானது ஆவணங்களைப் பதிவு செய்வதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம், வில்லங்க சான்றுகள் மற்றும் சான்றளிக்கப்பட்ட நகல்களை வழங்குவதற்கான கட்டணம், திருமணங்கள், சங்கங்கள், சீட்டுகள், கூட்டுபங்காண்மை நிறுவனங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்கான கட்டணம் போன்றவற்றின் மூலம் வருமானத்தை ஈட்டுகிறது. சுமார் 83% வருமானமானது விற்பனை ஆவணங்களைப் பதிவு செய்வதன் மூலம் ஈட்டப்படுகிறது. மொத்த வருவாயில் சென்னை மண்டலத்தின் பங்களிப்பு மட்டும் ஏறக்குறைய 45% ஆகும்.

மாநில கருவூலத்தின் வருவாய் பங்களிப்பில் பதிவுத்துறையானது மூன்றாவது இடத்தில் உள்ளது. 2022-2023 நிதியாண்டில், துறையின் வருவாயான ரூ.17,296.84 கோடி, 34,41,248 எண்ணிக்கை ஆவணங்கள் பதிவு செய்வதன் மூலம் ஈட்டப்பட்டுள்ளது. இது கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் வருவாயில் 24.32% அதிகரிப்பு

மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கையில் 14.78 % அதிகரிப்பு ஆகும்.

**4.1 கடந்த பத்து ஆண்டுகளில் அனைத்து இனங்களில் இருந்தும் ஈட்டப்பட்ட மொத்த வருவாய் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள்**

| நிதி ஆண்டு | வருவாய் (ரூ. கோடியில்) | சென்ற நிதியாண்டை விட வளர்ச்சி விகிதம் | பதிவான ஆவணங்களின் எண்ணிக்கை | சென்ற நிதி ஆண்டை விட வளர்ச்சி விகிதம் |
|---|---|---|---|---|
| 2013-14 | 8,055.74 | 8.05% | 26,53,291 | -1.38% |
| 2014-15 | 8,279.64 | 2.78% | 25,73,931 | -2.99% |
| 2015-16 | 8,562.38 | 3.41% | 25,28,561 | -1.76% |
| 2016-17 | 7,007.74 | -18.16% | 20,27,916 | -19.80% |
| 2017-18 | 9,121.53 | 30.16% | 22,10,595 | 9.01% |
| 2018-19 | 11,071.02 | 21.37% | 25,73,478 | 16.42% |
| 2019-20 | 11,028.23 | -0.39% | 25,87,816 | 0.56% |
| 2020-21 | 10,643.08 | -3.49% | 26,95,650 | 4.17% |
| 2021-22 | 13,913.65 | 30.73% | 29,98,048 | 11.22% |
| 2022-23 | 17,296.84 | 24.32% | 34,41,248 | 14.78% |

## 4.2 சந்தைபடுத்தக்கூடிய பத்திரங்கள் மீதான முத்திரைத் தீர்வை

பங்கு மற்றும் கடனீட்டுப் பத்திரங்களின் வெளியீடு மற்றும் பரிமாற்றத்திற்கான முத்திரைத் தீர்வை சம்பந்தப்பட்ட பங்குச் சந்தைகள் மற்றும் வெளியீட்டு நிறுவனங்கள் மூலம் வசூலிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் வசிப்பவர்களால் அப்பரிவர்த்தனைகள் செய்யப்பட்டால், இவ்வாறு வசூலிக்கப்படும் முத்திரைத் தீர்வை மாதாந்திர அடிப்படையில் பதிவுத்துறைக்கு இந்நிறுவனங்களால் அளிக்கப்படுகிறது. இந்நேர்வில் கடந்த மூன்று ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| **வரிசை எண்.** | **நிதியாண்டு** | **முத்திரைத் தீர்வை வசூல் (கோடிகளில்)** |
|---|---|---|
| 1 | 2020-2021 | 238.61 |
| 2 | 2021-2022 | 366.60 |
| 3 | 2022-2023 | 199.60 |

## 4.3 பிற இனங்களிலிருந்து வருவாய்

திருமணங்கள், சங்கங்கள், சீட்டுகள், கூட்டுபங்காண்மை நிறுவனங்கள் போன்றவற்றின் பதிவுக்காக பல்வேறு கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. 2022-2023 நிதியாண்டில் வசூலிக்கப்பட்ட கட்டண விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ.எண் | வருவாய் விவரங்கள் | வருவாய் வசூல் (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | திருமணப் பதிவு | 3.62 |
| 2. | சங்கப் பதிவு | 9.70 |
| 3. | சீட்டுப் பதிவு | 16.43 |
| 4. | கூட்டுபங்காண்மை நிறுவன பதிவு | 1.40 |
| 5. | மற்றவைகள் (பிறப்பு மற்றும் இறப்பு சான்றுகள் மற்றும் பிற கட்டணங்கள்) | 19.89 |
| 6. | சந்தைபடுத்தக்கூடிய பத்திரங்கள் | 199.60 |
| | **மொத்தம்** | **250.64** |

## 5. சந்தை மதிப்பு வழிகாட்டி குழு

தமிழ்நாடு சட்டம் 13/2008-இன்படி 01.06.2010 முதல் அமல்படுத்தப்பட்ட இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 47AA ஆனது பதிவுத்துறை தலைவர் தலைமையில் ஒரு மதிப்பீட்டுக் குழுவை அமைக்க மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. மாநிலத்தில் சந்தை வழிகாட்டி மதிப்புகள் குறித்த கொள்கை மற்றும் வழிமுறைகளை உருவாக்கி நிர்வகிக்கும் பொறுப்பினை மதிப்பீட்டுக் குழு கொண்டுள்ளது. மேலும், மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் துணை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி துணை குழுக்கள் மதிப்பீட்டுக் குழுவின் கீழ் செயல்படுவதோடு மதிப்பீட்டுக் குழுவால் நிர்ணயம் செய்யப்படும் நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன.

சந்தை வழிகாட்டி மதிப்பை அதிகரிக்க துணை குழுக்களுக்கு அதிகாரம் உள்ளது மற்றும் துணை குழுக்களின் பரிந்துரையின் பேரில் சந்தை வழிகாட்டி மதிப்பை குறைக்க மதிப்பீட்டுக் குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களுக்கு முறையே சர்வே எண்கள் மற்றும் தெருக்களின் அடிப்படையில் வழிகாட்டி மதிப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வழிகாட்டி மதிப்பு விவரங்கள் https://tnreginet.gov.in என்ற பதிவுத்துறை இணையதளத்தில் உள்ளன.

## 5.1 வழிகாட்டி மதிப்பு சீரமைத்தல்

சந்தை மதிப்பு வழிகாட்டியானது துணை குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் 01.04.2012 முதல் திருத்தியமைக்கப்பட்டது. எனினும் சந்தை மதிப்பு வழிகாட்டி 09.06.2017 முதல் மாநிலம் முழுவதும் மதிப்பீட்டுக் குழுவால் ஒரே சீராக 33% குறைக்கப்பட்டது.

சொத்துகளின் சந்தை மதிப்பானது காலத்திற்கேற்ப அதிகரிக்கவோ குறையவோ செய்யலாம். இது மதிப்பு வழிகாட்டியில் முரண்பாடுகளை உருவாக்குவதால் இம்முரண்பாடுகளை சரிசெய்யவும் சரியான சந்தை வழிகாட்டி மதிப்பை நிர்ணயம் செய்யவும் 'வழிகாட்டி மதிப்பு சீரமைத்தல் குழு' ஒன்றை அமைத்து அரசாணை (நிலை) எண்.180,

வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 27.12.2021-இன்படி அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளன. இந்த உயர்மட்டக் குழு, மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சரின் தலைமையிலான வழிகாட்டுதல் குழுவின் கண்காணிப்பின் கீழ் இயங்கும். உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகள் ஏற்கெனவே உள்ள நடைமுறைகளின்படி மதிப்பீட்டுக் குழு மற்றும் துணை குழுவினால் பரிசீலிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

## 5.2 வழிகாட்டி மதிப்பு மற்றும் பதிவுக் கட்டணம் மாற்றம்

சமீப வருடங்களில் சந்தை மதிப்பு மிக அதிகமாக உயர்ந்துள்ளதால் வழிகாட்டி மதிப்பினை சந்தை மதிப்பை பிரதிபலிப்பதாக மாற்ற வேண்டும் என்று கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. சர்வே நம்பர் வாரியாக இதனைப் பரிசீலிக்க கால அவகாசம் தேவைப்படுவதால் ஓர் இடைக்கால ஏற்பாடாக 08.06.2017 வரை வழக்கத்தில் இருந்த வழிகாட்டி மதிப்புகளை தற்போதைய வழிகாட்டி மதிப்பாக மாற்றி 2023-2024 நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 09.06.2017 முதல் வழிகாட்டி மதிப்பு விற்பனை,

நன்கொடை, பரிவர்த்தனை மற்றும் குடும்ப உறுப்பினர் அல்லாதவர்களுக்கான ஏற்பாடு ஆவணங்களைப் பொருத்து வழிகாட்டி மதிப்பு 33 சதவீதம் குறைக்கப்பட்டபோது பதிவுக் கட்டணம் 1 சதவீதத்தில் இருந்து 4 சதவீதமாக உயர்த்தப்பட்டது. தற்போது பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளை ஏற்று அதே நிதிநிலை அறிக்கையில் இவ்வினங்களுக்கான பதிவுக் கட்டணம் 4 சதவீதத்தில் இருந்து 2 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு குறிப்பாக வங்கிக் கடன்கள் பெற்று வீடு வாங்கும் மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 6. முத்திரைத் தீர்வை விலக்கு

இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 9(1)(a)-இன் கீழ் முத்திரைத் தீர்வையில் சலுகை வழங்க மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது. தமிழ்நாட்டில் தொழில்களை ஊக்கப்படுத்த தொழில் தொடங்க தேவையான நிலம் / கொட்டகை / கட்டடம் ஆகியவற்றின் விற்பனை அல்லது குத்தகை அல்லது குத்தகையுடன் கூடிய விற்பனை

ஆவணங்களுக்காக கீழ்கண்ட தொழிற்கொள்கைகளின் கீழ், முத்திரைத் தீர்வை சலுகையை அரசாங்கம் வழங்கியுள்ளது.

1. விண்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்துறை கொள்கை, 2019.
2. தமிழ்நாடு மின்சார வாகனக் கொள்கை, 2019.
3. தமிழ்நாடு மின்னணு வன்பொருள் உற்பத்திக் கொள்கை, 2020.
4. தமிழ்நாடு தொழில் கொள்கை, 2021.

## 7. மோசடியான பதிவுகளை தடுத்தல்

மோசடி பதிவுகளை தடுக்க தற்போதைய அரசாங்கம் பல பாராட்டத்தக்க முயற்சிகளை எடுத்துள்ளது.

### 7.1 ஆதாரைப் பயன்படுத்தி நிகழ் நேரத்தில் ஆவணதாரர்களின் அடையாளத்தினை சரிபார்த்தல்

ஆவணப்பதிவின் போது ஆவணதாரரின் கைரேகையை ஆதார் தரவுகளுடன் சரிபார்க்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பதிவர்கள் குறித்த விவரங்கள் ஆதார் தரவிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு,

அவ்விவரங்கள் மேலெழுத்துடன் (endorsement) சேர்த்து அச்சுப்பிரதி எடுக்கப்படுகிறது. இந்த வசதியானது ஆள்மாறாட்ட நிகழ்வுகளை வெகுவாக குறைத்துள்ளது. வயது மூப்பு அல்லது விரலில் காயம் போன்றவற்றினால் கைரேகை பொருந்தாமல் போகும் நிலையில் கருவிழிபடலம் மூலம் ஆதார் தரவுடன் ஒத்திசைவு செய்யும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆதார் ஒத்திசைவு வசதியானது பதிவர்களின் சம்மதத்தின் அடிப்படையிலானது என்ற போதிலும், இவ்வசதியில் இரண்டு ஆளறி சாட்சிகள் வலியுறுத்தப்படுவதில்லை என்பதால் பெரும்பாலான பதிவர்கள் இவ்வசதியைப் பயன்படுத்த முன்வருகின்றனர்.

## 7.2 ஆவணத்தை தயாரிக்கும் ஆவண எழுத்தர் அல்லது வழக்கறிஞரின் புகைப்படத்தை ஒட்டுதல்

மோசடி பதிவைத் தடுக்கவும், மோசடி செய்பவர்களின் மனதில் அச்சத்தை ஏற்படுத்தவும், தவறு செய்பவர்களை எளிதில் கண்டுபிடிக்கவும், ஆவணத்தினை தயாரிக்கும் ஆவண எழுத்தர்களின் அல்லது வழக்கறிஞர்களின் உரிம எண் அல்லது வழக்குரைஞர் கழக பதிவு எண்ணைக்

குறிப்பிட்டு கையொப்பம் செய்வதுடன், அவர்களது புகைப்படத்தின் பிம்பத்தை ஆவணத்தின் இறுதி பக்கத்தில் அச்சிட அறிவுறுத்தி சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

## 7.3 பதிவு விதிகளில் விதி 55A உட்புகுத்துதல்

மோசடி பதிவைக் குறைக்க, பதிவின்போது ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட அசல் ஆவணம் சரிபார்க்கப்படுகிறது. முந்தைய அசல் ஆவணம் தொலைந்து விட்டால், விற்பனையாளர் காவல்துறையில் இருந்து ‘ஆவணம் கண்டுபிடிக்க முடியவில்லை’ என்ற சான்றிதழையும் இது தொடர்பான தினசரி நாளிதழில் வெளியிடப்பட்ட விளம்பரத்தையும் சமர்ப்பிக்க வேண்டும். பூர்வீக சொத்தாக இருந்தால், சொத்தின் உரிமையாளர் தனது உரிமையை நிரூபிக்க பட்டா, வரி இரசீது போன்றவற்றை சமர்ப்பிக்க வேண்டும். மேலும், பதிவு செய்வதற்கு 10 நாட்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட வில்லங்க சான்றிதழும் பதிவின் போது சரிபார்க்கப்படுகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து சரிபார்ப்புகளும் பதிவு செய்யும் அலுவலர்களால் நிர்வாக ஆணைகளின் அடிப்படையிலேயே செய்யப்பட்டு வந்ததால், இந்நடைமுறைக்கு சட்டபூர்வமான அங்கீகாரத்தை வழங்குவதற்காக, அரசு உரிய வழிமுறைகளின் படி நடவடிக்கை மேற்கொண்டு பதிவு விதி 55A-யை உட்புகுத்தி இதனை அதிகார பூர்வமாக 05.09.2022 அன்று சிறப்பு அரசிதழ் எண்.SRO A-16(a)/2022-இல் வெளியிட்டது. புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள பதிவு விதி 55A ஆனது, அசையா சொத்துக்களைப் பதிவு செய்வதில் ஆள்மாறாட்டம் மற்றும் மோசடிக்கு எதிரான ஒரு தடுப்பாக செயல்படுகிறது. மேலும், இப்புதிய விதியானது பதிவு நடைமுறையில் நம்பகத்தன்மையை ஏற்படுத்தியுள்ளதோடு அப்பாவி அசல் உரிமையாளர்கள் மற்றும் வாங்குபவர்களின் நலன்களையும் பாதுகாக்கிறது.

## 7.4 மோசடி பதிவுகளை விசாரிப்பதற்கான சிறப்பு புலனாய்வு குழு

கடந்த காலங்களில் பதிவுகளில் நடந்த விதி மீறல்கள் குறித்து விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழு ஒன்றினை அமைத்து அரசாணை (நிலை) எண்.174, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 15.12.2021-இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மோசடி ஆவணங்களின் பதிவை அக்குழு கண்டறிந்து, அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ஆவணங்களின் பதிவில் உள்ள தவறுகள் சரி செய்யப்படும். சொத்தினை இழந்த உண்மையான உரிமையாளருக்கு அதனை மீட்டு திருப்பித் தருவதற்கும் அதன் மூலம் நில அபகரிப்பாளர்களிடம் தாங்கள் இழந்த சொத்தை மீட்பதில் பொதுமக்கள் சந்திக்கும் இன்னல்களைக் குறைக்கவும் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**7.5 போலியான மற்றும் மோசடியான ஆவணத்தை இரத்து செய்ய உத்தரவிட பதிவுத்துறை தலைவருக்கு சட்டபூர்வ அதிகாரம் அளித்தல்**

இதற்கு முன்பாக சாதாரண மக்கள் எந்தவொரு மோசடி மற்றும் போலியான பதிவையும் இரத்து செய்ய தங்களது அதிகார வரம்பிற்குட்பட்ட உரிமையியல் நீதிமன்றங்களையே அணுக வேண்டியிருந்தது. எனவே, அத்தகைய சாதாரண மக்களின் துன்பங்களைத் தணிக்கும் வகையில், மோசடி மற்றும் போலி பதிவை இரத்து செய்ய உத்தரவிடுவதற்காக பதிவுச் சட்டம், 1908-இல் பொருத்தமான திருத்தங்களைக் கொண்டு வர தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா 2022 ஆகஸ்டு மாதம் மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, போலியான அல்லது மோசடியான ஆவணத்தை இரத்து செய்யும் அதிகாரத்தை மாவட்டப்பதிவாளர் அல்லது பதிவுத்துறை தலைவருக்கு வழங்கும் வகையில் பதிவுச் சட்டம், 1908-இல் உரிய திருத்தம்

மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு சட்டம் 41/2022 மூலம் பிரிவு 77A மற்றும் வேறு சில பிரிவுகள் உட்புகுத்தப்பட்டன. பதிவுச் சட்ட பிரிவு 22A மற்றும் பிரிவு 22B-க்கு முரணாக பதிவு செய்யப்பட்ட ஆவணம் தொடர்பாக தானாக முன்வந்து அல்லது இது தொடர்பாக பெறப்படும் புகார் மனுக்களின் மீது விசாரணை மேற்கொண்டு, அவ்வாவணம் போலியான அல்லது மோசடியான ஆவணம் என கண்டறியப்பட்டால் அந்த ஆவணத்தை இரத்து செய்து மாவட்டப்பதிவாளர் அல்லது பதிவுத்துறை தலைவர் உத்தரவிடலாம்.

மாவட்டப்பதிவாளரின் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க பதிவுத்துறை தலைவருக்கும் பதிவுத்துறை தலைவரின் அசல் உத்தரவுகளுக்கு எதிரான மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க அரசுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் 16.08.2022 முதல் அமலுக்கு வந்துள்ளது. மேற்கண்ட சட்டத்தின் மூலம், தங்கள் சொத்துக்களில் மோசடி அல்லது போலி பதிவினால் பாதிக்கப்பட்ட நபர்கள், அதிகார வரம்பிற்குட்பட்ட உரிமையியல் நீதிமன்றங்களை அணுக

வேண்டிய அவசியமின்றி, அந்தந்த மாவட்டப் பதிவாளரை அணுகி நிவாரணம் பெறலாம்.

**8. சங்கங்கள்**

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975-இன் கீழ் சங்கங்கள் பதிவு செய்யப்படுகின்றன. மாநிலத்தில் உள்ள இலக்கியம், விஞ்ஞானம், சமயம், தொண்டு, விளையாட்டு மற்றும் பிற பிரிவுகள் தொடர்பான அமைப்புகளை சங்கங்களாக பதிவு செய்ய தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975 வழிவகுக்கிறது. பயனுள்ள நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களைக் கொண்டு ஒரு குழுவாக செயல்படும் நபர்களால் ஒரு சங்கம் உருவாக்கப்பட்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975-இன் கீழ் பதிவு செய்யப்படுகிறது.

குறைந்தபட்சம் ஏழு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஒரு சங்கத்தைத் தோற்றுவிக்கலாம். சங்கங்களின் பதிவின்போது தாக்கல் செய்யப்படும் சங்கத்தின் அமைப்பு குறிப்பு மற்றும் சங்கத்தின் துணைவிதிகளில் குறைந்தபட்சம் ஏழு உறுப்பினர்கள் கையெழுத்திட வேண்டும்.

சங்கங்கள் தோற்றுவிக்கப்படும் அந்தந்த மாவட்டங்களிலேயே அவை பதிவு செய்யப்படுகின்றன. தொடர்புடைய மாவட்டத்தின் மாவட்டப்பதிவாளரிடம் இச்சங்கங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். புதிதாக சங்கம் பதியப்படும்போது அதற்கான விண்ணப்பத்தை இணைய வழியாகவே பதிவேற்றம் செய்யலாம். அவ்வாறு பதிவேற்றம் செய்யப்படும் ஆவணங்களை மாவட்டப்பதிவாளர் பரிசீலித்து அவை உரிய முறையில் இருப்பின் சங்கத்தைப் பதிவு செய்து மின்னணு கையொப்பம் (Digitally signed) செய்யப்பட்ட பதிவு சான்றிதழை வழங்குகிறார். சம்பந்தப்பட்ட சங்கத்தினர் இப்பதிவு சான்றிதழை தங்களது பயனர் உள்நுழைவு (User login) மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒவ்வொரு சங்கமும் அதனை நிர்வகிக்க குறைந்தபட்சம் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஒரு செயற்குழுவினைப் பெற்றிருக்க வேண்டும். செயற்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகளுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். அவர்களின் பதவிக்காலத்திற்கேற்ப செயற்குழு தேர்தல் நடத்தப்படவேண்டும்.

சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து சங்கங்களும் ஒரு நிதி ஆண்டில் குறைந்தது ஒரு முறையாவது பொதுக்குழு கூட்டம் நடத்தி தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு கணக்குகளை சங்க பொதுக்குழு கூட்டத்தில் ஒப்புதல் பெற்று மாவட்டப்பதிவாளரிடம் ஒவ்வொரு வருடமும் கோர்வை செய்ய வேண்டும். ஆவணங்களைக் கோர்வை செய்வதில் ஏற்படும் காலதாமதம் 10 ஆண்டுகள் வரை இருப்பின் மாவட்டப்பதிவாளராலும், 20 ஆண்டுகள் வரை இருப்பின் பதிவுத்துறை தலைவராலும் 20 ஆண்டுகளுக்கு மேல் இருப்பின் அரசாலும் தாமதத்தை மன்னித்து ஆணையிடப்படுகிறது.

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975-இன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கம் முறையாக செயல்படவில்லை என்றாலோ அல்லது சங்கத்தின் செயல்கள் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதாக இல்லை என்றாலோ அல்லது சங்கங்கள் பதிவுச் சட்டப் பிரிவுகளையோ விதிகளையோ மீறியுள்ளது என்றாலோ, சங்க நிர்வாகத்தில்

நிதி முறைகேடுகள் கண்டறியப்பட்டாலோ அச்சங்கத்தின் விவகாரங்களை நிர்வகிக்க ஒரு சிறப்பு அதிகாரியை குறிப்பிட்ட காலத்திற்கு நியமிக்க தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்ட பிரிவு 34A-இன் கீழ் அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

31.03.2023 அன்றுள்ளபடி மாநிலம் முழுவதிலும் 2,35,700 பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் உள்ளன. 2022-2023-ஆம் ஆண்டில் (01.04.2022 முதல் 31.03.2023 வரை) **ரூ.9.70 கோடி** சங்கங்களின் மூலம் அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**31.03.2023 அன்று உள்ளவாறு பதிவு செய்து செயல்படும் சங்கங்களின் விவரம்**

| வ. எண் | மண்டலம் | பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சென்னை | 54,950 |
| 2. | கோயம்புத்தூர் | 17,608 |
| 3. | கடலூர் | 14,275 |
| 4. | மதுரை | 27,564 |

| | | |
|---|---|---|
| 5. | இராமநாதபுரம் | 18,165 |
| 6. | சேலம் | 25,792 |
| 7. | தஞ்சாவூர் | 16,557 |
| 8. | திருச்சிராப்பள்ளி | 18,509 |
| 9. | திருநெல்வேலி | 15,732 |
| 10. | வேலூர் | 26,548 |
| | **கூடுதல்** | **2,35,700** |

**9. சீட்டுகள்**

சீட்டு நிறுவனங்களின் சீட்டு வணிகம் மற்றும் செயல்பாடுகள் சீட்டு நிதிகள் சட்டம், 1982 மற்றும் தமிழ்நாடு சீட்டு நிதி விதிகள், 1984 ஆகியவற்றின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

மாநில அளவில் பதிவுத்துறை தலைவர் சீட்டுப் பதிவாளராகவும் கூடுதல் பதிவுத்துறை தலைவர் கூடுதல் சீட்டுப் பதிவாளராகவும் உள்ளனர். துணை பதிவுத்துறை தலைவர் இணை சீட்டுப் பதிவாளராகவும் மாவட்டப்பதிவாளர் துணை சீட்டுப் பதிவாளராகவும் மற்றும் சார்பதிவாளர் (சீட்டு மற்றும் சங்கம்) உதவி சீட்டுப் பதிவாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

சீட்டு நிறுவனங்களின் பதிவு, சீட்டுகளின் தொடக்கம் மற்றும் செயல்பாடுகள் இத்துறையால் நிர்வகிக்கப்படுகிறது. சீட்டு நிறுவனங்கள் சீட்டுத் தொகைக்கு சமமான தொகையை பிணைய வைப்புத் தொகையாக செலுத்திய பின்னரே சீட்டு துவங்க முன் ஒப்பளிப்பு அனுமதி வழங்கப்படுகிறது.

31.03.2023 அன்றுள்ளபடி மாநிலம் முழுவதிலும் 2650 பதிவு செய்யப்பட்ட சீட்டு நிறுவனங்கள் உள்ளன. 2022-2023-ஆம் ஆண்டில் (01.04.2022 முதல் 31.03.2023) வரை **ரூ.16.43 கோடி** அரசுக்கு வருவாய் ஆக ஈட்டி தரப்பட்டது.

**31.03.2023 அன்று உள்ளவாறு சீட்டு நிறுவனங்களின் விவரம்**

| வ. எண் | மண்டலம் | சீட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சென்னை | 339 |
| 2. | கோயம்புத்தூர் | 558 |
| 3. | கடலூர் | 124 |
| 4. | மதுரை | 163 |
| 5. | இராமநாதபுரம் | 61 |
| 6. | சேலம் | 149 |

| | | |
|---|---|---|
| 7. | தஞ்சாவூர் | 123 |
| 8. | திருச்சிராப்பள்ளி | 297 |
| 9. | திருநெல்வேலி | 736 |
| 10. | வேலூர் | 100 |
| | **கூடுதல்** | **2650** |

## 10. சீட்டு நடுவம்

சீட்டுக்கள் மற்றும் சீட்டுக் குழுக்களின் நடைமுறைகள் தொடர்பாக உருவாகும் சச்சரவுகளை (Dispute) பாதிக்கப்படும் சந்தாதாரரோ (Subscriber) அல்லது முன்பரோ (Foreman) துணை சீட்டுப் பதிவாளரான மாவட்டப்பதிவாளர் முன்னிலையில் சமரச தீர்வுக்காக முன்வைக்கலாம். வட சென்னை, தென் சென்னை, மத்திய சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் தனி சீட்டு நடுவர்கள் உள்ளனர். பிற மாவட்டங்களில் நிர்வாக மாவட்டப்பதிவாளரே சீட்டு நடுவராக செயல்படுகிறார். சீட்டு நடைமுறைகள் தொடர்பாக உருவாகும் சச்சரவுகளின் மீது சீட்டு நடுவர்கள் விசாரணை மேற்கொண்டு தீர்ப்பாணைகள் வழங்குகிறார்கள். சீட்டு நடுவர்களின் தீர்ப்பாணைகளுக்கு எதிராக அரசிடம் மேல்முறையீடு செய்யலாம். இந்த சட்டத்தின் கீழ் எழும்

சச்சரவுகள் தொடர்பாக எந்தவொரு வழக்குகளையும் விசாரிக்க உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை.

## 11. கூட்டுபங்காண்மை நிறுவனங்கள்

இந்திய கூட்டுபங்காண்மைச் சட்டம், 1932-ன் கீழ் அனைத்து நிர்வாக மாவட்டப்பதிவாளர்களும் கூட்டுபங்காண்மை நிறுவனங்களின் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்டார் 2.0 மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் கூட்டுபங்காண்மை நிறுவனங்களுக்கு பயனர் உள்நுழைவு (Login ID) வழங்கப்பட்டுள்ளது. மேலும் புதிய கூட்டுபங்காண்மை நிறுவனப் பதிவிற்கான விண்ணப்பத்தை இணையதளம் மூலமாகவே சமர்ப்பிக்கலாம். கூட்டுபங்காண்மை நிறுவனத்தால் தாக்கல் செய்யப்படும் விண்ணப்பத்தை மாவட்டப்பதிவாளர் பரிசீலித்து, நிறுவனத்தைப் பதிவுசெய்து மின்னனு கையொப்பமிட்ட (Digitally signed) பதிவு சான்றிதழை வழங்குகிறார்.

இச்சான்றிதழை சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பயனர் உள்நுழைவு (User login) மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இவ்வகையில் கூட்டுபங்காண்மை நிறுவன பதிவிற்காக மாவட்டப்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் வரவேண்டிய அவசியம் இல்லை.

இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் கூட்டுபங்காண்மை நிறுவனங்கள் தொடர்ந்து செயல்பட்டு வருவது குறித்து, ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்த மூன்று மாதங்களுக்குள் உறுதிமொழியை கட்டாயம் கோர்வை செய்திட வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் அமைப்பில் ஏற்படும் எவ்வித மாற்றமும் கூட்டுபங்காண்மை நிறுவன பதிவாளருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். இந்நிறுவனங்களின் வருடாந்திர அறிவிப்பைக் கோர்வை செய்தல், முகவரி மாற்றம், கூட்டாளர்களின் பெயர் மற்றும் முகவரி மாற்றம் போன்றவற்றைக் கோர்வை செய்ய கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன.

31.03.2023 அன்றுள்ளவாறு பதிவு செய்யப்பட்ட 6,06,298 கூட்டுபங்காண்மை நிறுவனங்கள் செயல்படுகின்றன. 2022-2023-ஆம் ஆண்டில் (01.04.2022 முதல் 31.03.2023 வரை) **ரூ.1.40 கோடி** வருவாய் கூட்டுபங்காண்மை நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்பட்டது.

**<u>31.03.2023 அன்று உள்ளவாறு கூட்டுபங்காண்மை நிறுவனங்களின் விவரம்</u>**

| வ.எண் | மண்டலம் | கூட்டுபங்காண்மை நிறுவனங்களின் விவரம் |
|---|---|---|
| 1. | சென்னை | 2,64,502 |
| 2. | கோயம்புத்தூர் | 67,664 |
| 3. | கடலூர் | 13,039 |
| 4. | மதுரை | 32,386 |
| 5. | இராமநாதபுரம் | 23,046 |
| 6. | சேலம் | 84,372 |
| 7. | தஞ்சாவூர் | 14,706 |
| 8. | திருச்சிராப்பள்ளி | 58,201 |
| 9. | திருநெல்வேலி | 21,702 |
| 10. | வேலூர் | 26,680 |
| | **கூடுதல்** | **6,06,298** |

## 12. திருமணப் பதிவு

தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009-இன் கீழ் மாநிலத்தில் நடைபெறும் திருமணங்கள் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும். பல்வேறு திருமண சட்டங்களின் கீழ் திருமண பதிவாளராக சார்பதிவாளர் செயல்படுகிறார். இந்து திருமணச் சட்டம் 1955, சிறப்பு திருமணச் சட்டம், 1954 மற்றும் தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009-இன் கீழ் ஏற்கனவே நடைபெற்ற திருமணங்களையும் பதிவாளர் பதிவு செய்கிறார்.

மேலும், திருமண பதிவாளர்கள் சிறப்பு திருமணச் சட்டம், 1954-இன் கீழ் திருமணத்தை நடத்தி வைக்கும் அதிகாரத்தைப் பெற்றவர்களாக உள்ளனர். இந்து திருமணச் சட்டம், 1955, பிரிவு 7A–இன் படி இரு இந்துகள், சீக்கியர்கள், சமணர்கள் மற்றும் பௌத்தர்களுக்கிடையேயான சுயமரியாதை அல்லது சீர்திருத்த திருமணங்களைப் பதிவு செய்கின்றனர்.

2022-2023-ஆம் நிதியாண்டில் வெவ்வேறு சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட திருமணங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | |
|---|---|
| தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009 | 77,738 |
| இந்து திருமணச் சட்டம், 1955 | 38,809 |
| சிறப்பு திருமணச் சட்டம், 1954 | 7,755 |

## 13. முத்திரைத்தாள் விற்பனையாளர்கள்

இந்திய முத்திரைச்சட்டம், 1899, பிரிவு 76A-இன் கீழான தமிழ்நாடு முத்திரை விதிகளின் விதி 25-இன்படி மாவட்டப்பதிவாளர்களால் முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பகுதியில் உள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப 10,000 பேருக்கு ஒரு முத்திரைத்தாள் விற்பனையாளர் என்ற விகிதாச்சாரத்தில் நிர்ணயம் செய்யப்படுகிறது. மாநிலத்தில் மொத்தம் 3,504 உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் செயல்பாட்டில் உள்ளனர்.

உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் தங்களது உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் மட்டுமே முத்திரைத்தாள்களை விற்பனை செய்யலாம். முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் கணக்குகள் மாதம் ஒரு முறை மாவட்டப்பதிவாளர்களாலும் வாரம் ஒரு முறை சார்பதிவாளர்களாலும் சரிபார்க்கப்படுகின்றன.

## 14. ஆவண எழுத்தர்கள்

தமிழ்நாட்டில் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் பெரும்பாலான ஆவணங்கள் உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்களால் தயாரிக்கப்படுகின்றன. ஆவண எழுத்தர்களுக்கு ஆவணங்கள் எழுதுவதற்கான உரிமங்கள், உரிய உரிமம் வழங்கும் அதிகாரியால், தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகள், 1982 - இன்படி வழங்கப்படுகிறது.

ஆவண எழுத்தர்கள் உரிமம் கீழ்கண்டவாறு மூன்று வகையாக வழங்கப்படுகிறது:

1. பதிவுத்துறை தலைவர் / தொடர்புடைய மண்டலத்தின் துணை பதிவுத்துறை தலைவரால்

வழங்கப்படும் மாநில அளவிலான உரிமம் (A உரிமம்),

2. மாவட்டப்பதிவாளர்களால் வழங்கப்படும் மாவட்ட அளவிலான உரிமம் (B உரிமம்) மற்றும்
3. மாவட்டப்பதிவாளர்களால் வழங்கப்படும் உப மாவட்ட அளவிலான உரிமம் (C உரிமம்)

31.03.2023 அன்றுள்ளவாறு மாநிலம் முழுமைக்கும் 5,141 உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் உள்ளனர். வகைப்பாடு வாரியான ஆவண எழுத்தர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | |
|---|---|
| மாநில உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் | 2,836 |
| மாவட்ட உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் | 1988 |
| உபமாவட்ட உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் | 317 |
| உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் மொத்தம் | 5,141 |

பொதுமக்கள் தங்கள் ஆவணங்களை தாங்களே எழுதிக் கொள்ளலாம். ஆவணத்தை தாங்களே தயாரித்துக் கொள்ள ஏதுவாக ஆவண மாதிரி படிவங்கள் பதிவுத்துறையின் இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.

## 14.1 தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் நல நிதியம்

ஆவண எழுத்தர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் நல நிதியம் அரசாணை (நிலை) எண்.175, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 01.12.2022-இன்படி, 02.12.2022 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இந்நிதியத்தின் உறுப்பினராக சேர விரும்பும் ஆவண எழுத்தர் ஒருமுறை நுழைவுக் கட்டணமாக ரூ.1000/- செலுத்தி உறுப்பினராக சேர்ந்து கொள்ளலாம்.

பிற நல வாரியங்களில் அளிக்கப்படும் நலத்திட்டங்களைப் போலவே விபத்து, இறப்புக்கான உதவி, உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவி போன்ற பல்வேறு நல உதவிகள் இந்நிதியத்தின் மூலம் செயல்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் சார்பதிவாளர் அலுவலகங்களில் பதிவாகும் ஒவ்வொரு ஆவணத்திற்கும் தலா ரூ.10/- ஆவண எழுத்தர்கள் நல நிதியத்திற்காக வசூலிக்கப்படுகிறது.

## 15. **துறையின் தகவல் தொடர்பு தொழில்நுட்ப முயற்சிகள்**

**கணினி மயமாக்கல் மற்றும் இலக்கமயமாக்கலில் பதிவுத்துறையானது ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது.**

06.02.2000 அன்று மேனாள் **மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் திரு.மு.கருணாநிதி அவர்களால்** முதலில் 14 சார்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் 9 மாவட்டப்பதிவாளர் அலுவலகங்களில் கணினி மயமாக்கல் ஸ்டார் திட்டம் (STAR-Simplified and Transparent Administration of Registration) அதாவது எளிய மற்றும் வெளிப்படையான நிர்வாகம் (கட்டம் 1) தொடங்கி வைக்கப்பட்டு பின்னர் அது பல கட்டங்களாக வளர்ச்சியடைந்து தற்போது பதிவுத்துறையின் கணினி மயமாக்கல் நூறு சதவிகிதத்தை எட்டியுள்ளது. கணினி வழி நிர்வாகத்தின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப தற்போது பல சேவைகள் இலக்கமயமாக்கப்பட்டுள்ளன.

பதிவுத்துறையில், ஸ்டார் (STAR)–2.0 திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த இணையதளம் மூலமாக முதற்கட்டமாக ஆவணப்பதிவுகள், வில்லங்க சான்று மற்றும் ஆவணங்களின்

சான்றிட்ட நகல் வழங்குதல் ஆகியனவும் அதனைத் தொடர்ந்து திருமணங்கள், சங்கங்கள், சீட்டு மற்றும் கூட்டுபங்காண்மை நிறுவனங்கள் பதிவு தொடர்பான பணிகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

### 15.1 'ஸ்டார் 2.0' திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள வசதிகள் மற்றும் வழங்கப்படும் சேவைகள்

ஸ்டார் 2.0 திட்டத்தில், பொதுமக்கள், ஆவண எழுத்தர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கென தனித்தனி உள்நுழைவு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன, மேலும் சங்கங்கள், சீட்டு நிறுவனங்கள் மற்றும் கூட்டுபங்காண்மை நிறுவனங்கள் தங்களுக்கென தனி உள்நுழைவு வசதியை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

1. பொதுமக்கள் தங்களின் உள்நுழைவில் சென்று தாங்களே ஆவணம் தயாரித்து ஆவணப்பதிவு அல்லது திருமணப்பதிவுக்காக நேரம், நாள் ஆகியவற்றை முன் பதிவு செய்து கொள்ளலாம். மேலும் வில்லங்க சான்று மற்றும் சான்றிட்ட நகல்களுக்கான விண்ணப்பங்களை

இணையவழியாகவே சமர்ப்பிக்க இயலும். இணையவழியாக பணம் செலுத்திடவும் இயலும்.

2. பதிவான ஆவணங்களின் நிலை குறித்து இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

3. வில்லங்க சான்றினை எவ்வித கட்டணமும் இன்றி இணையதளத்தில் பார்வையிடலாம் மற்றும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

4. பதிவர்கள் தங்களது விண்ணப்பங்களின் நிலையினை உடனுக்குடன் அறிந்துகொள்ள குறுஞ்செய்தி வசதி உள்ளது.

5. பதிவுச் சட்டம், 1908-இல் கொண்டுவரப்பட்டுள்ள சிறப்பு திருத்தத்தின் மூலமாக, வங்கியிலிருந்து கடன் பெறுவதற்கான உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு ஆவணம், இரசீதுகள் மற்றும் 5 வருடம் வரையிலான குடியிருப் தொடர்பான குத்தகை ஆவணங்களை இணையவழியாக பதிவு செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

6. சங்கம் மற்றும் கூட்டுபங்காண்மை நிறுவனங்களை அலுவலகம் செல்லாமலேயே இணையவழி பதிவு செய்யும் வசதி.

7. சீட்டு நிறுவன கூட்ட நிகழ்ச்சி குறிப்புகளை இணையவழி கோர்வை செய்யும் வசதி ஆகியன ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 15.2 தரவு களஞ்சியம்

பெருங்குடியில் உள்ள திருவாளர்கள் எல்காட் மாநில தரவு மையம், பதிவுத்துறை தலைவர் அலுவலகம், சாந்தோமில் அமைந்துள்ள 'அருகாமை தரவு மீட்பு மையம்' (Nearline Data Recovery Centre) மற்றும் புனேயில் உள்ள தேசிய தகவல் மையத்தின் பேரிடர் மீட்பு மையம் ஆகிய மூன்று இடங்களில் பதிவுத்துறையின் தரவுகள் சேமிக்கப்படுகின்றன. இதன் மூலம் ஆவணங்கள் திருத்தப்படுவதும் சிதைக்கப்படுவதும் தடுக்கப்படுகிறது.

### 15.3 தணிக்கை மென்பொருள்

பதிவுத்துறையின் தணிக்கைப் பணிகளுக்கென தனி மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் தணிக்கைப் பிரிவின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. தணிக்கை அறிக்கைகள் உருவாக்குதல், பதிவு அலுவலர்களது

பதில் அறிக்கைகளைப் பெறுதல், இறுதியாணை பிறப்பித்தல், மேல்முறையீடு செய்தல், சட்ட பூர்வ நடவடிக்கை எடுத்தல், இழப்பை வசூலித்தல் போன்றவை தொடர்பான வசதிகளை இத்தணிக்கை மென்பொருள் வழங்குகிறது.

## 16. பதிவுத்துறையில் பொது மக்களின் நலனுக்கான சிறப்பு திட்டங்கள்

### 16.1 மின்னணு ரேகை பதிவு கருவி மூலம் ரேகை பதிவு செய்தல்

ஆவணப்பதிவின் போது வலை நிழலி (Web-Cam) மூலம் பதிவர்களின் புகைப்படமும் மின்னணு ரேகைக்கருவி மூலம் கைரேகையும் எடுக்கப்படுகின்றன. எழுதி கொடுப்பவரது மின்னணு ரேகையானது முந்தைய ஆவணப்பதிவின்போது எடுக்கப்பட்டிருப்பின் தற்போது எடுக்கும் கைரேகையினை அதனுடன் ஒத்திசைவு செய்வதன் மூலம் ஆள்மாறாட்டம் தடுக்கப்படுகிறது.

## 16.2 மின்னணு முறையில் சில வகை ஆவணங்களை இணையவழி பதிவு செய்தல்

சில வகையான ஆவணங்களை இணைய வழியாகவே தாக்கல் செய்ய ஏதுவாக பதிவுச்சட்டம், 1908-இன் பிரிவுகள் 32, 52 மற்றும் 69 ஆகியவை தமிழ்நாடு சட்டம் 24/2022-இன் கீழ் திருத்தப்பட்டு 12.09.2022 முதல் மின்னணு முறை தாக்கல் செய்யும் வசதி அரசாணை (நிலை) எண்.130, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 12.09.2022-இன்படி அமல்படுத்தப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, கீழ்கண்ட ஆவணங்களுக்கு இணையவழி பதிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது:

1. வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்களில் கடன்பெறுவதற்காக எழுதி தரப்படும் உரிமை ஆவணங்களின் ஒப்படைப்பு ஆவணம்.
2. வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்களால் கடனைத் திருப்பிச் செலுத்திய பிறகு எழுதித் தரப்படும் இரசீது ஆவணங்கள்.

3. குடியிருப்பு பயன்பாட்டிற்கான ஐந்து ஆண்டுகள் வரையிலான வாடகை அல்லது குத்தகை தொடர்பான ஆவணங்கள்.

இணைய வழி பதிவு வசதியின் காரணமாக மேற்படி ஆவணங்களைத் தாக்கல் செய்து பதிவு செய்து கொள்ள பொதுமக்கள் நேரிடையாக சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆவணதாரர்கள் மின்னணு முறையில் ஆவணத்தினை இணையவழியாக தங்களது இல்லங்களில் இருந்தே எழுதி தரலாம். அவர்களின் கைரேகை இந்திய தனிப்பட்ட அடையாள ஆணையத்தால் (UIDAI) பராமரிக்கப்படும் ஆதார் தரவுகளுடன் ஒப்பிடப்பட்டு சரிபார்க்கப்படுகிறது. தொடர்புடைய சார்பதிவாளருக்கு ஆவணம் இணையவழி அனுப்பப்பட்டு பதிவு செய்யப்படும். இந்த ஆவணத்தை பொது மக்கள் அவர்களின் உள்நுழைவுக்கு சென்று தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

## 16.3 இணையவழி சேவைகளுக்கான மின்கையொப்பம் (e-Sign)

வில்லங்க சான்றுகள், பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள், திருமணப்பதிவு சான்றின் வடிப்புகள், சங்கங்களின் பதிவுச் சான்றுகள், கூட்டுபங்காண்மை நிறுவனங்களின் பதிவுச் சான்றுகள் போன்ற சான்றுகள் பதிவு அலுவலர்களது ஆதார் அடிப்படையிலான மின்கையொப்பம் இடப்பட்டு இணையவழியாகவே வழங்கப்படுவதால் நேரில் அலுவலகம் செல்வது தவிர்க்கப்படுகிறது. பயனர்கள் இச்சான்றுகளை தங்களது வசதிக்கேற்ற இடம் மற்றும் நேரத்தில் அவர்களது உள்நுழைவு மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

## 16.4 மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம், சென்னை பெருநகர மாநகராட்சி, குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் தொடர்பான ஆவணங்களில் பதிவுக்குப் பின்னர் பெயர் மாற்றத்திற்கான தன்னிச்சை விண்ணப்ப வசதி

சொத்துகள் தொடர்பான ஆவணப்பதிவு முடிவடைந்தவுடன் மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான

கழகம், சென்னை பெருநகர மாநகராட்சி, குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஆகியவை தொடர்பான ஆவணங்களில் பெயர் மாற்றத்திற்கான விண்ணப்பத்தை தன்னிச்சையாக அனுப்பிடும் வசதியானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 07.12.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

**16.5 தன்னிச்சையான பட்டா மாறுதல்**

பதிவுத்துறையின் 'ஸ்டார் 2.0' மென்பொருளும் வருவாய் துறையின் 'தமிழ்நிலம்' மென்பொருளும் இணைக்கப்பட்டுள்ளன. ஆவணப்பதிவு முடிந்தவுடன் உட்பிரிவு தேவைப்படும் இனங்கள் மற்றும் உட்பிரிவு தேவைப்படாத இனங்கள் ஆகியவற்றின் பட்டா மாற்றத்திற்கான விண்ணப்பங்கள் இணைய வழியாகவே அனுப்பப்படுகின்றன. உட்பிரிவு தேவைப்படும் இனங்களுக்கான உட்பிரிவு கட்டணம் பதிவு அலுவலரால் வசூலிக்கப்படுகிறது. உட்பிரிவு தேவைப்படாத இனங்களில் விற்பவர் பெயர் பட்டாவில் இருப்பின் தன்னிச்சையாக பட்டா மாற்றம் ஆகும் வசதி தமிழ்நிலம் மென்பொருளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 16.6 மூத்த குடிமக்களுக்கென முன்னுரிமை பதிவு வசதி

சார்பதிவாளர் அலுவலகங்களில் முன்பதிவு வரிசைக்கிரமப்படி ஆவணப்பதிவு மேற்கொள்ளப்படுகிறது. மூத்த குடிமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு எழுதிக்கொடுப்பவர் அல்லது எழுதிவாங்குபவரில் யாரேனும் ஒருவர் எழுபது வயதைக் கடந்தவராக இருப்பின் தங்களின் வரிசை எண்ணுக்காக காத்திராமல் சார்பதிவாளர் அலுவலகம் வந்தவுடன் அவர்களுக்கு முன்னுரிமை அளித்து பதிவு செய்யும் வண்ணம் மென்பொருள் மாற்றி அமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## 16.7 தட்கல் டோக்கன் முறை

பெரும்பாலான பதிவர்கள் மங்களகரமாக நினைக்கப்படும் நாள் மற்றும் நேரத்தில் தங்கள் ஆவணங்களைப் பதிவு செய்ய விரும்புகின்றனர். விரும்பிய நாட்களில் அவர்கள் டோக்கன் பெறும் நோக்கில் தட்கல் டோக்கன் முறையானது, ஆவணப்பதிவு அதிகம் நடைபெறும் 100 சார்பதிவாளர் அலுவலகங்களில் அரசாணை (நிலை) எண்.92, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 30.05.2022–இன்

மூலம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மங்களகரமாக நினைக்கப்படும் நாட்களில் பதிவு செய்ய விரும்புபவர்கள் சாதாரண டோக்கன்கள் பூர்த்தியாகி இருந்தாலும் கூடுதல் கட்டணமாக ஒரு தட்கல் டோக்கனுக்கு ரூ.5000/- செலுத்தி டோக்கன் பதிவு செய்து கொள்ளலாம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 28.09.2022 அன்று இத்திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

## 16.8 இணையவழி அட்டவணை திருத்தம் மற்றும் திருமண சான்று திருத்தம் மேற்கொள்ளும் வசதி

வில்லங்க சான்றுகள் மற்றும் திருமண சான்றுகளில் திருத்தங்கள் தேவைப்படும் நிகழ்வுகளில் பொது மக்கள் இணைய வழியாகவே உரிய சார்பதிவாளர் அலுவலகத்திற்கு திருத்தங்கள் மேற்கொள்ள தேவையான விவரங்களை அனுப்பிடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதியால் பொது மக்களின் நேரம் மிச்சப்படுவதோடு அவர்கள் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் வர வேண்டியது தவிர்க்கப்படுகிறது. சார்பதிவாளர் அத்திருத்த விவரங்களை சரிபார்த்த பின்னர் மாவட்டப்பதிவாளரது ஒப்புதலுக்கு அனுப்பி

வைக்கிறார். மாவட்டப்பதிவாளரின் ஒப்புதலுக்குப் பின் அத்திருத்த விவரங்கள் இணையதளத்தில் பிரதிபலிக்கும்.

## 16.9 அரசு நிலங்கள் பதிவு செய்யப்படுவதை தடுத்தல்

அரசு நிலங்கள் பதிவு செய்யப்படுவதை ஆரம்ப நிலையிலேயே தன்னிச்சையாக தடுப்பதற்காக ஒரு மென்பொருள் வசதி உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு சர்வே எண் அரசு நிலமாக இருப்பின் இவ்வசதியின் மூலம் பதிவுத்துறையின் 'ஸ்டார் 2.0' மென்பொருளானது வருவாய் துறையின் 'தமிழ்நிலம்' மென்பொருள் தரவுகளோடு மேற்காண் நில விவரங்களை நிகழ்நேரத்தில் ஒத்திசைவு செய்து அச்சொத்து தொடர்பான ஆவணப்பதிவினை தன்னிச்சையாக தடுக்கிறது. இந்த மென்பொருளால் அரசு நிலங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் நிலங்கள், நீர்நிலைகள் பதிவு செய்யப்படுவது தடுக்கப்படுகிறது.

மேலும். தடை செய்யப்பட்ட நிலங்களின் விவரங்களை உள்ளீடு செய்ய தனி மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத்துறை, வக்ஃப்

வாரியம் ஆகியவற்றிற்கு சொந்தமான நிலங்கள், நீதிமன்றங்களால் பதிவுக்கு தடை செய்யப்பட்ட நிலங்கள் போன்றவற்றின் விவரங்கள் உட்புகுத்தப்பட்டுள்ளதால் இவற்றின் பதிவுக்காக டோக்கன் பதிவு செய்ய மென்பொருள் அனுமதிக்காது. மேலும், இவ்வசதியினால் தடை செய்யப்பட்ட நிலவிவரங்கள் குறித்து வாங்குபவர்கள் அறிந்து கொள்ளலாம்.

### 16.10 ஒருங்கிணைந்த தகவல் மையம்

பதிவுத்துறையின் சேவைகள் குறித்த விவரங்களை வாட்ஸ்ஆப், சாட்போட்(chatbot), வலையொளி (You tube) காணொளி போன்ற அனைத்து தகவல் தொடர்பு வசதிகளின் மூலம் அளித்திட அரசாணை (நிலை) எண்.128, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 26.08.2022-இல் ஆணைகள் வெளியிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 16.11 ஒருங்கிணைந்த சேவை மையம்

ஆவணம் தயாரித்தல், வில்லங்க சான்று வழங்குதல், சான்றிட்ட நகல் வழங்குதல், பதிவுக்கான முன்பதிவு செய்தல்,

இணையவழி கட்டணம் செலுத்துதல் ஆகிய பதிவுத்துறையின் சேவைகளை பொது மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் அளித்திட 'ஒருங்கிணைந்த சேவை மையம்' சென்னை மற்றும் கோயம்புத்தூரில் சோதனை அடிப்படையில் உருவாக்கி செயல்படுத்திடும் பொருட்டு அரசால், அரசாணை (நிலை) எண்.162, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 10.11.2022-இல் நிர்வாக ஆணை அளிக்கப்பட்டுள்ளது. இச்சேவை விரைவில் அளிக்கப்படும்.

### 16.12 இணைய வழியாக வங்கிகளில் கட்டணம் செலுத்திடும் முறை

பதிவுத்துறைக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை பாதுகாப்பான முறையில் இணையவழி அல்லது இணைய வழியுடன் இணைந்த வங்கி முகப்பில் செலுத்திட அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளான பாரத மாநில வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி, இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி, சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா, பஞ்சாப் நேஷனல் வங்கி, பேங்க் ஆஃப் பரோடா, யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா ஆகிய வங்கிகள் மூலம் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பாரத மாநில வங்கி பிற வங்கிகளின் ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுகிறது. இதன் மூலம் அட்டவணைப்படுத்தப்பட்ட 58 வங்கிகள் வழியாக இணைய வங்கி சேவை (Net Banking), ஒருங்கிணைந்த கட்டணமுகப்பு (UPI Payment), நிகழ்நேரத்தில் மொத்த தொகை தீர்வு செய்தல் (RTGS), தேசிய மின்னணு நிதி பரிமாற்றம் (NEFT), பற்று அட்டை (Debit Card) மற்றும் கடன் அட்டை (Credit Card) ஆகிய முறைகளில் கட்டணங்களை செலுத்தலாம். இதுதவிர, ரூ.1000/-த்திற்கும் கீழான கட்டணங்களை செலுத்துவதற்காக அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் PoS கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 16.13 இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் பொருத்துதல் மற்றும் நெகிழ்வட்டு வழங்குதல்

சார்பதிவாளர் அலுவலகங்களில் வெளிப்படையான சேவையை உறுதிப்படுத்தும் வண்ணம் ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திலும் 3 இணைய நெறிமுறை புகைப்படக்கருவிகள் (IP கேமரா) பொருத்தப்பட்டு பதிவுத்துறை தலைவர் அலுவலகம் மற்றும் மண்டல துணை

பதிவுத்துறை தலைவர் அலுவலகத்திலிருந்து தொலை கண்காணிப்பு செய்திடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திலும் பதிவறையினைக் கண்காணிக்கும் வகையில் கூடுதலாக இரண்டு இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் நடப்பு ஆண்டில் பொருத்தப்பட்டுள்ளன.

இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் (IP camera) மூலம் பதிவாகும் ஆவணப்பதிவு/திருமண பதிவு நிகழ்வுகள் ரூ.100/- கட்டணம் வசூலித்து பதிவு பொதுமக்களுக்கு நெகிழ்வட்டில் வழங்கப்படுகிறது.

## 16.14 இணையதளத்தில் வில்லங்க சான்று பார்வையிடும் வசதி

பொதுமக்கள் தங்கள் சொத்து தொடர்பான வில்லங்க சான்றினை பதிவுத்துறை இணையதளத்தின் மூலம் எங்கிருந்தும் எப்போது வேண்டுமானாலும் கட்டணமின்றி பார்வையிடலாம் மற்றும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 01.01.1975 முதல் நாளது வரையிலான காலத்திற்கு வில்லங்க சான்று விவரங்கள் துறையின் இணையதளத்தில்

காணப்படுகின்றன. இவ்வசதியைப் பயன்படுத்தி தினமும் ஏறத்தாழ 80,000 வில்லங்க சான்றுகள் பதிவிறக்கம் செய்யப்படுகின்றன.

சட்டரீதியான மதிப்பு மிக்க ஆவணங்களின் களஞ்சியமாக 1865-ஆம் ஆண்டு முதல் பதிவுத்துறை செயல்படுகிறது. 1975-ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்திற்கான வில்லங்க சான்று தற்போது கைமுறையில் அளிக்கப்படுகிறது. 01.01.1950 முதல் 31.12.1974 வரையிலான காலகட்டம் தொடர்பான அட்டவணை II தரவுகளை இலக்கமயமாக்கிட நடப்பு ஆண்டில் அரசால் அரசாணை (நிலை) எண்.162, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 26.11.2021-இல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**16.15 மின்னணு பதிப்புமுறை (e-Stamping)**

திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் (SHCIL) மூலம் மின்னணு பதிப்பு முறையில் (e-Stamping) முத்திரைத் தீர்வையை செலுத்தும்

மாற்று வழியானது, ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒரு முன்னோடித் திட்டமாக 9 சார்பதிவாளர் அலுவலகங்களில் இந்த மின்னணு பதிப்பு முறையானது 27.05.2010 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்போது அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் மின்னணு பதிப்பு முறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

முத்திரைத்தாளினைப் போன்றே எந்தவொரு ஆவணத்திற்கும் மின்னணு பதிப்பு முறையினைப் பயன்படுத்தலாம். மின்னணு பதிப்பு முறையில் ஒரு முத்திரைச்சான்றை எந்த மதிப்பிற்கும் பயன்படுத்தலாம். நீதி சார்ந்த மற்றும் நீதி சாரா முத்திரைத்தாட்கள் மின்னணு பதிப்பு முறையின் மூலம் வழங்கப்படுகிறது,

திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் (SHCIL)-ஆல் அங்கீகரிக்கப்பட்ட வசூல் மையங்களாக பல தேசிய மற்றும் தனியார் வங்கிகள் செயல்படுகின்றன.

## 17. உள்ளாட்சி அமைப்புகளுக்கான சொத்து மாற்ற வரி

விற்பனை, பரிவர்த்தனை மற்றும் நன்கொடை ஆவணங்களுக்கு சந்தை மதிப்பில் 2% உள்ளாட்சி அமைப்புகளுக்கான சொத்து மாற்ற வரியாக பதிவுத்துறையால் வசூலிக்கப்படுகிறது. சுவாதீனத்துடன் கூடிய அடமான ஆவணங்களுக்கு இவ்வரி 1% வசூலிக்கப்படுகிறது. உள்ளாட்சி நிறுவனங்களுக்கான பல்வேறு சட்டங்களின் அடிப்படையில் வசூலிக்கப்படும் இந்த சொத்து மாற்ற வரியானது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு பதிவுத்துறையால் மாற்றம் செய்யப்படுகிறது. பதிவுத்துறையால் வசூலிக்கப்படும் சொத்து மாற்ற வரியில் வசூல் கட்டணமாக 3% மட்டும் துறையால் இருத்திக் கொள்ளப்பட்டு, மீதமுள்ள 97% உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒவ்வொரு காலாண்டும் மாற்றம் செய்யப்படுகிறது.

2021-2022-ஆம் நிதியாண்டில் வசூலிக்கப்பட்ட ரூ.2032.60 கோடி சொத்து மாற்ற வரியில் ரூ.1971.62 கோடி உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றம் செய்யப்பட்டது.

மீதமுள்ள தொகை வசூல் கட்டணமாக பதிவுத்துறையால் இருத்திக்கொள்ளப்பட்டது.

## 18. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-இன் கீழ் விவரங்கள் கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் துறையால் பரிசீலிக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுதாரர்களிடமிருந்து 27,602 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவர்கள் கோரிய தகவல் வழங்கப்பட்டது மற்றும் கட்டணமாக ரூ.3,15,782/- வசூலிக்கப்பட்டுள்ளது.

## 19. அலுவலகங்கள் மறுசீரமைப்பு

### 19.1 புதிய பதிவு மண்டலங்கள் உருவாக்கம்

1) மதுரை மண்டலத்தைப் பிரித்து இராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய பதிவு மண்டலம் உருவாக்கப்பட்டு 29.12.2022 முதல் இயங்கி வருகிறது.

2) **சென்னை பதிவு மண்டலத்தைப் பிரித்து புதியதாக சென்னை (தெற்கு) பதிவு மண்டலத்தை உருவாக்க நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இப்புதிய மண்டலம் விரைவில் உருவாக்கப்படும்.**

**19.2 புதிய பதிவு மாவட்டங்கள் உருவாக்கம்**

அரசாணை (நிலை) எண்.183, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 09.12.2022-இன்படி, தென்சென்னை பதிவு மாவட்டத்தைப் பிரித்து புதியதாக தாம்பரம் பதிவு மாவட்டம் மற்றும் அரசாணை (நிலை) எண்.185, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 09.12.2022-இன்படி கோயம்புத்தூர் பதிவு மாவட்டத்தைப் பிரித்து புதியதாக கோயம்புத்தூர் (வடக்கு) மற்றும் (தெற்கு) பதிவு மாவட்டங்களை உருவாக்க நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கி அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவை விரைவில் செயல்பாட்டிற்கு வரும்.

## 19.3 புதிய தணிக்கை அலகுகள் உருவாக்கம்

சேலம் (கிழக்கு), கோபிசெட்டிபாளையம் மற்றும் காரைக்குடி பதிவு மாவட்டங்களில் புதிய தணிக்கை மாவட்டப்பதிவாளர் அலுவலகங்களைத் தோற்றுவிக்க அரசால் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கி அரசாணை (நிலை) எண்.24, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 13.03.2023-இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## 19.4 நிர்வாக மாவட்டப்பதிவாளர் பணியிடங்கள் தரம் உயர்த்துதல்

வருவாய் மாவட்ட தலைமையிடங்களில் இயங்கி வரும் 26 நிர்வாக மாவட்டப்பதிவாளர்களின் பணி செயல்திறனை அதிகரிக்கும் விதமாக அப்பணியிடங்களை உதவி பதிவுத்துறை தலைவர் நிலைக்கு தரம் உயர்த்தி அரசால், அரசாணை (நிலை) எண்.160, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, 08.11.2022-இல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

### 19.5 புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் உருவாக்கம்

2022-2023 ஆம் ஆண்டில் கீழ்கண்ட ஆறு சார்பதிவாளர் அலுவலகங்கள் பொது மக்களின் வசதிக்காக புதியதாக உருவாக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | பதிவு மாவட்டம் | புதியதாக உருவாக்கப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்கள் | தோற்றுவிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | திருப்பத்தூர் | 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் | 26.04.2022 |
| 2. | மதுரை தெற்கு | சாமநத்தம் | 29.12.2022 |
| 3. | மதுரை வடக்கு | 1. பொதும்பு<br>2. மேலூர் கிழக்கு<br>3. செட்டிக்குளம்<br>4. காதக்கிணறு | 29.12.2022 |

திருச்சி பதிவு மவட்டத்தில் தில்லை நகர் என்ற புதிய சார்பதிவகம் தோற்றுவிக்க அரசாணை (நிலை) எண்.13, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 27.02.2023-இல் நிர்வாக

அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த அலுவலகம் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

**19.6 சார்பதிவாளர் அலுவலக எல்லைகள் சீரமைப்பு**

சார்பதிவாளர் அலுவலக எல்லைகளை வருவாய் மாவட்டங்களுக்கு ஏற்ப சீரமைத்துக் கொள்ள அரசு ஆணைகள் வழங்கியுள்ளது. 2022-2023-ஆம் ஆண்டில் மதுரை வருவாய் மாவட்டத்தைப் பொருத் மதுரை (தெற்கு) மற்றும் மதுரை (வடக்கு) பதிவு மாவட்டங்களில் அமைந்துள்ள சார்பதிவாளர் அலுவலகங்களின் எல்லைகள், வருவாய் வட்டங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் அடிப்படையில் மறுசீரமைப்பு செய்யப்பட்டு அரசாணை (நிலை) எண்.137, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.10.2022 மற்றும் அரசாணை (நிலை) எண்.138, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.10.2022 ஆகியவற்றில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

### 19.7 குக்கிராமங்கள் வருவாய் கிராமங்களுடன் இணைப்பு

நடப்பு ஆண்டில், வருவாய் கிராமங்களுக்கு உட்பட்ட குக்கிராமங்கள் ஒரே சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குள் அமைய வேண்டுமென அரசு உத்தரவிட்டதைத் தொடர்ந்து மதுரை (வடக்கு), மதுரை (தெற்கு), கிருஷ்ணகிரி, தூத்துக்குடி, விருதுநகர், பாளையங்கோட்டை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், நாகப்பட்டினம், காரைக்குடி, புதுக்கோட்டை மற்றும் அரியலூர் பதிவு மாவட்டங்களில் உள்ள குக்கிராமங்கள் சம்பந்தப்பட்ட வருவாய் கிராமங்களுடன் இணைப்பதற்கு அரசாணை (நிலை) எண்.147, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 28.10.2021-இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. சிவகங்கை மாவட்டத்தைப் பொருத்து இப்பணி தற்போது நடைபெற்று வருகிறது.

### 19.8 அரசு கட்டடங்களில் செயல்படும் மிக பழைமையான சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல்

பதிவுத்துறையில், 148 சார்பதிவாளர் அலுவலகங்களும் ஒரு மாவட்டப்பதிவாளர் அலுவலகமும் மிக பழைமையான

கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றில் முதற்கட்டமாக 50 கட்டடங்கள் அப்புறப்படுத்தப்பட்டு நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு 2022-2023 நிதியாண்டில் ரூ.96.64 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையிலிருந்து விரிவான விலைவிகித மதிப்பீட்டறிக்கைகள் பெறப்பட்டு இவ்வலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**19.9 அதிக ஆவணப்பதிவு நடைபெறும் சார்பதிவாளர் அலுவலகங்களில் பொதுமக்களுக்கு சிறப்பு வசதிகளுடன் அடிப்படை கட்டமைப்புகளை அமைத்தல்**

அதிக பதிவுகள் நடைபெறும் அலுவலகங்களில் பொதுமக்களுக்கான அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் வசதிகள் அவர்களது தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஏற்படுத்தப்படும் என்றும் 2022-2023 நிதியாண்டில் முதற்கட்டமாக ரூ.50 லட்சம் செலவில் இரண்டு சார்பதிவாளர் அலுவலகங்கள் தேர்வு செய்யப்பட்டு இத்திட்டம்

நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், தென் சென்னை பதிவு மாவட்டத்திலுள்ள குன்றத்தூர் மற்றும் கோயம்புத்தூர் பதிவு மாவட்டத்திலுள்ள காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகங்கள் தேர்வு செய்யப்பட்டு தலா ரூ.25 லட்சம் செலவில் பொதுமக்களுக்கான மேம்படுத்தப்பட்ட அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் வசதிகள் செய்வதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டு அவ்வலுவலகங்களில் கட்டுமான பணி நடைபெற்று வருகிறது.

**20. பதிவு பொதுமக்களின் நலனுக்காக அரசால் எடுக்கப்பட்டுள்ள இதர புதிய நடவடிக்கைகள்**

**20.1 பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் செயல்படும் கட்டுப்பாட்டு அறை**

பொதுமக்களின் குறையினை உடனுக்குடன் களைய பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் ஒரு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டுப்பாட்டு அறைக்கு மூன்று அலைபேசி எண்கள் வழங்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் தங்கள் புகார்களை அலைபேசி மூலமாகவோ

அல்லது வாட்ஸ்அப் மற்றும் மின்னஞ்சல் மூலமாகவோ தெரிவிக்கலாம்.

**20.2 திங்கட்கிழமைகளில் குறைதீர்க்கும் நாள்**

துணை பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் மாவட்டப்பதிவாளர்கள் ஒவ்வொரு திங்கள் கிழமையன்றும் அரசாணை (நிலை) எண்.118, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 29.09.2021-இன்படி குறைதீர்க்கும் நாள் முகாமை தங்கள் அலுவலகத்தில் நடத்துகின்றனர். இம்முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மற்றும் புகார்கள் உடனடியாக பரிசீலிக்கப்பட்டு பொதுமக்களின் குறைகள் உடனுக்குடன் தீர்க்கப்படுகின்றன.

**20.3 சனிக்கிழமைகளில் சார்பதிவாளர் அலுவலகங்கள் செயல்படுதல்**

பொதுமக்களின், குறிப்பாக அலுவலகம் செல்வோரின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, அதிக பதிவுப்பணி உள்ள சார்பதிவாளர் அலுவலகங்கள் சனிக்கிழமைகளில் செயல்பட அரசு அனுமதித்துள்ளது. அதன்படி, அதிக ஆவணங்கள் பதிவு செய்யப்படும் 100 சார்பதிவாளர் அலுவலகங்கள் தேர்வு

செய்யப்பட்டு, அவ்வலுவலகங்களில் அனைத்து வகையான பதிவுகளையும் சனிக்கிழமைகளிலும் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.64, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 28.04.2022-இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. சனிக்கிழமைகளில் செய்யப்படும் பதிவுக்காக, ஒவ்வொரு ஆவணத்திற்கும் செலுத்தப்படவேண்டிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்துடன் கூடுதலாக ரூ.1,000/- கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இத்திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

### 20.4 இந்திய கிறித்துவ திருமண பதிவு மேற்கொள்ள புதிய வசதி

இந்திய கிறித்துவ திருமணச் சட்டம், 1872-இன்படி இந்திய கிறித்துவர்களுக்கு திருமணத்தை நடத்தி வைக்கும் கிறித்துவ குருமார்களும் மற்றும் திருமணத்தை நடத்தி வைக்க அரசு உரிமம் பெற்ற உரிமதாரர்களும் இணைய வழியாகவே விண்ணப்பித்து திருமணத்தைப் பதிவு செய்து கொள்வதற்கான புதிய நடைமுறை 28.09.2022 அன்று

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**20.5 இந்திய கிறித்துவ திருமண சான்று உண்மை வடிப்புகள் மண்டல துணை பதிவுத்துறை தலைவர்களால் வழங்கப்படுதல்**

இந்திய கிறித்துவ திருமண சட்டம், 1872-இன்படி இந்திய கிறித்துவ திருமண சான்று வடிப்புகளைப் பாதுகாத்தல் மற்றும் உண்மை வடிப்புகள் வழங்கும் பணிகளை பதிவுத்துறை தலைவர் மட்டுமே மேற்கொள்ள இயலும். கிறித்துவர்கள் தங்களுடைய திருமண சான்று வடிப்புகளின் உண்மை நகலைக் கோரி விண்ணப்பிக்க சென்னையில் அமைந்துள்ள பதிவுத்துறை தலைவர் அலுவலகத்திற்கு வருகை தரும் நிலை இதற்கு முன்னர் இருந்து வந்தது. எனவே, கிறித்துவ பொதுமக்களின் நலன் கருதி, இந்திய கிறித்துவ திருமண சான்று வடிப்புகளின் உண்மை நகல்களை வழங்குவதற்கான அதிகாரம் பதிவுத்துறையில் உள்ள 10 மண்டல துணைப்பதிவுத்துறை தலைவர்களுக்கு அரசாணை (நிலை) எண்.148, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 28.10.2021-இல்

வழங்கப்பட்டு, இத்திட்டம் 26.04.2022 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

21. முடிவுரை


பதிவு பொது மக்களுக்கு மன நிறைவைத் தரும் வகையில் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அவர்களது இல்லங்களுக்கே பல சேவைகளைக் கொண்டு செல்லு வகையில் இந்த அரசு பல்வேறு சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி உள்ளது. பதிவு நாளிலேயே ஆவணங்களைத் திரும்ப வழங்குவதன் மூலம் பொதுமக்களின் பொன்னான நேரம் காக்கப்படுகிறது. மேலும் வில்லங்க சான்று, சான்றிட்ட நகல்கள், திருமணச் சான்று வடிப்பு, பிறப்பு மற்றும் இறப்பு சான்று வடிப்பு, சங்கம், சீட்டு நிதி, கூட்டுபங்காண்மை நிறுவனங்கள் போன்றவை தொடர்பான சேவைகளை இணைய வழியாகவே வழங்குவதன் மூலம் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு பொதுமக்கள் நேரில் வருகை தருவதைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பதிவுத்துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு புதிய சீர்திருத்த நடைமுறைகள் பதிவு பொது மக்களின்


பாராட்டுதலைப் பெற்றுள்ளதோடு மட்டுமல்லாமல் அவர்களின் மன நிறைவின் காரணமாக இதுவரை இல்லாத அளவில் அரசுக்கு பதிவுத்துறை மூலம் வரும் வருவாயும் வெகுவாக உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**பி. மூர்த்தி**


**வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்**


## பதிவுத்துறையில் 2022–23 நிதி ஆண்டில் பல்வேறு சட்டங்களின் கீழ் வருவாய் வசூல்




2017–18 நிதி ஆண்டு முதல் 2022–23 நிதி ஆண்டு வரை பதிவுத்துறையில் வருவாய் ஒப்பீடு
தொகை (ரூ.கோடியில்)
20,000.00
18,000.00
16,000.00
14,000.00
12,000.00
10,000.00
8,000.00
6,000.00
4,000.00
2,000.00
0.00
₹ 9,121.53 கோடி
₹ 11,071.02 கோடி
₹ 11,028.23 கோடி
₹ 10,643.08 கோடி
₹ 13,913.65 கோடி
₹ 17,296.84 கோடி
2017–18
2018–19
2019–20
2020–21
2021–22
2022–23
நிதி ஆண்டு

2017–18 நிதி ஆண்டு முதல் 2022–23 நிதி ஆண்டு வரை பதிவுத்துறையில் ஆவணப்பதிவு ஒப்பீடு





ஆறு ஆண்டுகளில் பதிவுத்துறையில் ஆவணப்பதிவு மற்றும் வருவாயின் போக்கு
ஆவணங்கள்
வருவாய் (ரூ. கோடியில்)
ஆவணங்கள் எண்ணிக்கை (இலட்சத்தில்)
தொகை (ரூ. கோடியில்)
4,000,000
3,500,000
3,000,000
2,500,000
2,000,000
1,500,000
1,000,000
500,000
0
20,000.00
18,000.00
16,000.00
14,000.00
12,000.00
10,000.00
8,000.00
6,000.00
4,000.00
2,000.00
0.00
2,210,595
2,573,478
2,587,816
2,695,650
2,998,048
3,441,248
₹ 9,121.53 கோடி
₹ 11,071.02 கோடி
₹ 11,028.23 கோடி
₹ 10,643.08 கோடி
₹ 13,913.65 கோடி
₹ 17,296.84 கோடி
2017-18
2018-19
2019-20
2020-21
2021-22
2022-23
நிதி ஆண்டு




போலி ஆவணப் பதிவுகளை தடுக்கும் நோக்கில் கொணரப்பட்ட புதிய தமிழ்நாடு சட்டத்தினை துவக்கி வைக்கும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 28.09.2022 அன்று இச்சட்டத்தின் கீழ் போலி ஆவணங்களை இரத்து செய்து பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை ஐந்து பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.




பதிவுத் துறையில் தட்கல் டோக்கன் வசதி மற்றும் திருமண சான்றுகளில் இணையவழி திருத்தம் செய்ய விண்ணப்பிக்கும் வசதிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 28.09.2022 அன்று துவக்கி வைத்தார்கள்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 02.12.2022 அன்று ஆவண எழுத்தர் நல நிதியத்தை துவக்கி வைத்து நல நிதியத்தின் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார்கள்.




மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 06.07.2022 அன்று கிருஷ்ணகிரியில் நடைபெற்ற பதிவு மண்டல அலுவலர்களின் சீராய்வுக் கூட்டத்தில் பதிவுத்துறையில் சிறப்பாக பணிபுரிந்த அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலர் திருமதி.பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., பதிவுத்துறை தலைவர் திரு.ம.ப. சிவன் அருள், இ.ஆ.ப., கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி,இ.ஆ.ப.,ஆகியோர் கலந்து கொண்டனர்.




மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் 29.12.2022 அன்று மதுரை பதிவு மண்டலத்தைப் பிரித்து இராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய இராமநாதபுரம் பதிவு மண்டலம் துவக்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி.பா.ஜோதி நிர்மலாசாமி. இ.ஆ.ப., பதிவுத்துறை தலைவர் திரு.ம.ப. சிவன் அருள், இ.ஆ.ப., மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.எஸ்.அனீஸ் சேகர், இ.ஆ.ப.,மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பதிவுத் துறையில் 2022-2023ல் தொடங்கப்பட்ட புதிய  அலுவலக கட்டடங்கள்




புதிய நாசரேத் சார்பதிவாளர் அலுவலக
கட்டடம், திருநெல்வேலி மண்டலம்.




புதிய புன்செய் புளியம்பட்டி சார்பதிவாளர்
அலுவலக கட்டடம், கோயம்புத்தூர் மண்டலம்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.